
GOKULAM

கோகுலம்

தர்மபுரி மாணவர் ஸ்பெஷல்



பரவசம் தரும் பரிசல் பயணம்!


ரூ.6/-

நவம்பர் 2003

"உங்களுக்குள் ஒளிந்திருக்கும் மேதையை அறிந்து கொள்ளுங்கள்"

உங்கள் குழந்தையின் துல்லியத்தையும் துரிதத்தையும் எமது மனக்கணித பயிற்சி மேம்படுத்துகிறது.

UCMAS™
Mental Arithmetic-India




பயிற்சியினால் மேம்படுத்தப்படும்

- வேகம்
- துல்லியம்
- கற்றுக் கொள்ளும் திறன்
- ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை
- கவனிக்கும் திறன்
- பிம்ப நினைவுத் திறன்

யூசிமாஸ் - அபாகஸ் மனக்கணித கல்வியில் இந்தியாவில் முன்னோடி

- உலகத்தின் தலைசிறந்த தத்துவம் தற்போது இந்தியாவில்
- அபாகஸ் மூலம் மனக்கணித பயிற்சி
- முழு மூளை மேம்பாட்டிற்கு
- 4-12 வயது குழந்தைகளுக்காக

Launching Shortly



U C MAS
Memory Technique-India

For all 12 - 16 years old

இந்தியாவில் 375 மையங்களில் சென்னையில் மட்டுமே 66க்கும் மேற்பட்ட மையங்கள்

மேலும் விபரங்களுக்கு

யூசிமாஸ் மென்டல் அரித்மெடிக் (இந்தியா) பிரைவேட்.லிமிடெட்.,

A1-1857, 13-வது மெயின் ரோடு, 6-வது அவென்யூ, அண்ணாநகர் (மேற்கு) சென்னை - 600 040. இந்தியா.

Tel : 91-44-2618 2396(5 Lines). Fax : 91-44-26180143 / 1706

Email: admin@ucmasindia.com Website: ucmasindia.com

National & International franchise enquiries solicited

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

**Bharathan Publications
Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்

தவளையின் மேளம்!

4



தித்திக்கும் தீபாவளி!

8



நவம்பர் 2003 மலர் : 21 இதழ் : 10

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

முதலில், உங்களைப் போல ஒரு மாணவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும், அதற்குச் சொல்லப்பட்ட ஆலோசனையையும் பார்க்கலாமா?

என் நண்பர்கள் சிலர், வகுப்பில் ஆசிரியர் நடத்தும் பாடங்களை மட்டும் நன்றாகப் படித்தால், பரீட்சையில் வெற்றி பெற முடியாது. கடைகளில் விற்கப்படும் நோட்ஸ்களை வாங்கிப் படித்தால்தான் வெற்றி பெற முடியும் என்கிறார்கள். இன்னும் சிலரோ, டியூஷனுக்குப் போனால் வெற்றி நிச்சயம் என்கிறார்கள். எனக்கு ஒரே குழப்பமாக உள்ளது. நிறைய மார்க் வாங்க என்ன செய்ய வேண்டும்?

இந்த மாணவனுக்குத் தரப்படும் ஆலோசனை உங்கள் அனைவருக்கும் கூட மிகவும் உபயோகமாக இருக்கும்.

உங்களுக்கென்று துணி எடுத்து அதை டைலரிடம் கொடுத்து உங்கள் அளவுக்கு ஏற்றபடி தைத்து அணிவது சிறந்ததா? கடையில் ஒரு ரெடிமேட் சட்டையை வாங்கி அணிவது சிறந்ததா? அது போன்றதுதான் இந்தக் கேள்வி. வகுப்பில் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதைக் கூர்மையாய் கவனித்து, நன்றாகப் புரிந்து கொண்டு, சந்தேகம் எழுமானால், கேள்வி கேட்டு விளக்கம் பெற்று, வீட்டிற்கு வந்ததும், பாடப் புத்தகத்தையும், வகுப்பில் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் போது எடுத்த குறிப்புகளையும் வைத்துக் கொண்டு, படிப்பது தான் சிறந்த முறை. நோட்ஸ்களை மனப்பாடம் செய்து, அப்படியே பரீட்சையில் எழுதுவது என்பது தவறான அணுகுமுறை. வகுப்பில் புரிந்து கொண்ட விஷயங்களை, குறிப்புகள் மற்றும் பாட புத்தகங்களை வைத்து ஆழமாய்ப் படித்தால், தனியாக டியூஷன் எதற்கு?



ஐஸ் கிரீம் எங்கே?

அடுத்து சில ஜோக்ஸ்.

ஆசிரியர்: ஒரு பையன் ஐஸ் கிரீம் சாப்பிடு கிறாற் போல படம் வரையச் சொன்னால், வெறும் பையனை மட்டும் வரைந்திருக் கிறாயே?

மாணவன்: பையன், ஐஸ்கிரீமைச் சாப்பிட்டு முடித்துவிட்டானே! அதனால்தான்.

ஒருவர், பத்திரிகை ஆபீசுக்கு வந்து, இறந்து போன தனது தந்தைக்கு நினைவு அஞ்சலி செலுத்தும் விதமாக அவரது புகைப்படத்துடன் ஒரு விளம்பரம் வெளியிட விரும்பினார். அதற்கு எவ்வளவு கட்டணம் ஆகும் என்று கேட்டபோது, பத்திரிகை ஊழியர், "ஓர் அங்குலத்துக்கு இருநாரு ரூபாய்" என்றார்.

ஓர் அங்குல விளம்பரத்துக்கு இருநூறு ரூபாய் வீதம், அவர் எத்தனை அங்குலம் விளம்பரம் தருகிறாரோ, அதற்கேற்ப கட்டணம் செலுத்த வேண்டும் என்பது நம்ம ஆசாமிக்குப் புரியவில்லை.

ரேட்டைக் கேட்டவுடன் மிரண்டு போய், "ஐயோ! இந்த ரேட் நமக்குக் கட்டுப்படி ஆகாது! என் அப்பா ஆறடி உயரமாயிற்றே" என்றாரே பார்க்கலாம்!

[redacted]



ஒரு கிராமத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு வந்தது. ஊர் மக்கள் பொதுவாக ஓர் ஆழ் துளைக் கிணறு போட முடிவு செய்தார்கள்.

ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே ஆழ்துளைக்கிணறு தோண்டினார்கள். தண்ணீர் கிடைக்கவில்லை.

வேறு ஓர் இடத்தினைத் தேர்ந்தெடுத்து, ஆழ்துளைக் கிணறு தோண்ட, அங்கேயும் தண்ணீர் வரவில்லை.


மூன்றாவதாக ஓர் இடத்தைத் தேடிப்பிடித்து, அங்கே ஆழ்துளைக் கிணறு வேலை நடந்தது. துரதிருஷ்ட வசமாக அங்கேயும் தண்ணீர் இல்லை. மக்கள் அனைவரும் சோகம் அடைந்தனர்.

அப்போது அந்த ஊருக்கு ஒரு ஞானி வந்தார். மக்கள் தங்கள் பிரச்னையைச் சொன்னார்கள்.

ஞானி "மூன்று இடங்களிலுமாக, மொத்தம் எத்தனை அடி ஆழம் கிணறு தோண்டியிருப்பீர்கள்?" என்று கேட்டார்.

"நூற்று முப்பது அடி ஆழம் இருக்கும்" என்றனர் ஊர் மக்கள்.

"மூன்று இடங்களில் தோண்டி நேரத்தை வீணாக்காமல், ஒரே இடத்தில் நூற்று முப்பது அடி ஆழத்துக்கு ஒரு கிணறு தோண்டியிருந்தால், தண்ணீர் கிடைத்திருக்குமில்லையா? உங்கள் முயற்சியில் தவறில்லை. ஆனால் சிதறடித்து விட்டதால் தான் பிரச்னை தீரவில்லை. தன்னம்பிக்கையுடன் சக்தியை ஒருமுகப்படுத்தி உழைத்திருந்தால், உங்கள் லட்சியம் நிறைவேறி இருக்கும்" என்றார்.



கடைசியாகக் கண்களை நம் பாதே டைப்பில் ஒரு படம் பார்க்க லாமா?

இங்குள்ள படத்தில் இடமிருந்து வலமாகச் செல்லும் கோடுகளை உற்றுப் பாருங்கள். கோணலாக இருப்பது போலத்தானே தோன்று கின்றன? இவை எல்லாமே உண்மை யில் இணையான கோடுகள்தான். என்ன உங்கள் கண்களையே நம்பமுடியவில்லையா?

— எஸ். சந்திரமௌலி

தவளையின் மேளம்!

பா.முருகேசன்



அந்தக் குளத்தில் தான் இக்காட்டின் மகாகனம் பொருந்திய சிங்கராஜா முதலான எல்லா விலங்குகளும் நீர் அருந்தி வாழ்ந்து வருகின்றன. தாமரை மலர்கள் நிறைந்து இருந்த அக்குளத்தின் ஒரு கரையிலிருந்து தாமரை இலைகளின் மீது மாறி மாறி அமர்ந்து மறுகரைக்கும், மீண்டும் இக்கரையிலிருந்து அக்கரைக்குமாகத் தாவிச் சென்று விளையாடுவது தவளை ‘தாத்தையா’வின் தினசரி பொழுது போக்கு.

வெகு தூர நகரப் பகுதியிலிருந்து தாத்தையாவின் உறவுக்காரத் தவளை தங்கமுத்து, அந்த வனத்திற்கு வந்து பல நாட்களாகிய பின்பும் கூட நகர வாழ்க்கையைப் பற்றியும், அங்கு வாழும் மனிதர்களைப் பற்றியும் பெருமையாகக் கூறிக் கொண்டேயிருந்தது.

“மனிதர்கள் ஒரு வகையான கருவியைக் கழுத்தில் கயிறு மூலமாகக் கட்டி, மடி மீது வைத்துக் கொண்டு ஒரு புறம் குச்சியாலும் மறுபுறம் கைகளாலும் அடித்து ஒலி எழுப்புவார்களே, அதைக் கேட்க கேட்க ஆனந்தமாக இருக்கும். அதற்குப் பெயர் மேளமாம்” என்று தங்கமுத்து கூறியதிலிருந்து, தாத்தையாவுக்கு, தானும் தன் வாழ்நாளில் எப்படியாவது ஒரு மேளத்தை அடிக்கச் செய்து கேட்க வேண்டும்! அதன் ஒலிக் கேற்பப் பாட வேண்டும் என்ற ஆசை உண்டானது.

தனது ஆசையைச் செயலாக்கும் எண்ணத்தோடு காட்டில் மர வேலைகளைச் செய்யும் மரங்கொத்தியைத் தவளை தாத்தையா காணச் சென்றது. இது சென்ற நேரம் மரங்கொத்தி ‘மணிக்கழுத்தன்’ தன் கூரிய மூக்கால் ஒரு மரத்தைக் கொத்திக் கொண்டிருந்தது.

“மரங்கொத்தி மணிக்கழுத்தே!



மண்ணில் சிறந்தது உன் பணியே
ஊரில் இருந்து எனைத் தேடி
உருண்டு வந்தான் தங்கமுத்து
அவன்
கூறிய கதைகள் பலவுண்டு
கூறிய விதத்தில் அழகுண்டு
அங்கே வாழும் மனிதர்கள்
தான்
அழகாய் மேளம் அடிப்பாராம்
அதுபோல் எனக்கும்
ஒன்றைத்தான்
ஆக்கித் தந்திட
இயன்றிடுமோ?
எதுதான் வேண்டும் அது செய்ய
என்பதை நீயும் சொல்வாயா?
இனிய குரலில் நான்பாடி
இசையை எழுப்பிட ஆசைதான்!"



என்று தவளை தாத்தையா மரங்கொத்தியைக் கேட்டதும், மரங்கொத்தி மணிக்கழுத்தன் சிறிது நேரம் யோசனை செய்தது. பின்னர்,

"தவளையண்ணா தாத்தையா
கவலை ஏனோ உனக்கையா
தட்டி மகிழ மேளத்தை
தந்திட என்னால் இயலாதே!
மரத்தைக் குடைந்து தந்திட
மட்டும் என்னால் முடியுமே!
விரும்பும் மேளம் செய்திடவும்
வேண்டிய இசையைப் பெற்றிடவும்
எலியின் துணைதான் எனக்குத்தேவை
புயலாய் நீயும் விரைவாக
எலியை அழைத்து வருவீரா?" என்று

கூறியது.

அது கேட்ட தாத்தையா, எலியைத்தேடிப் புறப்பட்டது. வெகு தூரம் தத்தித் தத்திச் சென்று ஒரு வழியாக எலியின் வளையை அடைந்தது. அப்போதுதான் வெளியில் சென்று வந்த எலி ஏகாம்பரன், தவளை தாத்தையாவை வரவேற்று உணவு கொடுத்து உபசரித்தது. பின்னர் தன்னைத் தேடி வந்த காரணத்தைக் கேட்டது.

தாத்தையா தவளையும் தன் மனதில் உள்ள ஆசையையும், தான் மரங்கொத்தியைச் சந்தித்ததையும் விபரமாகக் கூறியது. அது கேட்டுச் சற்று மௌனமாக இருந்த எலி ஏகாம்பரன் தவளையிடம் கூறியது:

"தவளை மாமா தாத்தையா
நீர் தத்திச் செல்லும் ஆளய்யா



தகுமோ இந்த ஆசைதான்
ஏகாம்பரன் எலி என்னால்
எதுதான் செய்ய இயன்றிடுமாம்!
அறுத்த மரத்தை ஒட்டிடவே
அழகுப் பசையை நீ சென்று
அருமை வேம்பிடம் வாங்கி வர
கனவு உனக்கு நனவாகும்
கைகளில் மேளம் கிடைத்து விடும்!"

என்றது எலி.

இது கேட்ட தாத்தையா, உடனே அங்கிருந்த வேப்பமரத்தை நோக்கித் தாவிச் சென்றது.

"வேப்ப மரமே பாப்பம்மா
வேணும் கொஞ்சம் பிசினம்மா,
தவளை எனக்கு மேளத்தை
தட்டி மகிழ்ந்திட தரவென்றே,
மரங் கொத்தி மணிக்கழுத்தன்
ஏகாம்பரன் எலியை அழைத்தானே
எழுந்த எலி அவனும்தான்
மேளம் செய்திட தனக்குத்தான்
மிகவும் தேவை பிசின் என்றான்
போதுமான பிசினைத்தான்
கசிந்தே நீ எனக்களித்து
கனிந்த இசையில் நான்பாட
கனத்த மேளம் செய்வதற்கு
தந்திட வேண்டும் பாப்பம்மா
தயவு செய்யணும் பாப்பம்மா!" என்று

கேட்டுக் கொண்டதும், வேப்ப மரம் வேண்டிய அளவு பிசினைக் கொடுத்தது.

அதைக் கொண்டு சென்ற தவளை தாத்தையா எலியிடம் கொடுக்க, எலி அதை எடுத்துக் கொண்டு மரங்கொத்தி மணிக் கழுத்தனிடம் சென்றது. அங்கு ஏற்கெனவே மரங்கொத்தி மரத்தைக் குடைந்து தயாராக வைத்திருந்தது. அவற்றைத் தேவையான அளவு நறுக்கி, வேப்பம் பிசினால் ஒட்டி மேளத்தைக் கொடுத்தது.



'இருபுறமும் இதில் தைப்பதற்கு தோல் வேண்டுமே! தோலால் இதைக் கட்டி, அடித் தால்தான் இசையைப் பெற முடியும்.' எனவே என்ன செய்வது என மூன்றும் யோசிக்க லாயின.

எலி ஏகாம்பரன் தவளை தாத்தையாவிடம் "நீ சென்று காட்டெருமை காங்கேயனிடம் இறந்து போன அவனது உறவினர்களின் தோல் ஒன்றை வாங்கி வா" என்றது.

தவளை தாத்தையாவும் வேகமாகத் தாவி ஓடி, காட்டெருமை காங்கேயனைக் கண்டு பிடித்தது.

"கருத்த அழகா காங்கேயா
கறுப்பே உனக்கு அழகய்யா
ஊரில் இருந்து எனைத்தேடி
உருண்டு வந்த என்தம்பி
மேளம் என்ற ஒன்றைத்தான்
செய்திடச் சொன்னான் என்னைத்தான்
மேளம் செய்து நான்மகிழ
மெல்லிய தோல் ஒன்றை நீ
மெதுவாய்த் தந்திட நான் மகிழ்வேன்"

என காங்கேயன் காட்டெருமையிடம் கேட்டது. இது கேட்ட காங்கேயன் காட் டெருமை,

"தவளை தம்பி தாத்தையா
தருவேன் உனக்குத் தோலய்யா
இருநாள் முன்னே இறந்த என்
இனிய தம்பியின் உடல் இதுதான்
எலும்பும் சதையும் பிரித்தெடுக்க
ஏற்ற நரியைக் காணவில்லை
என்று அவனிங்கு வருவானோ
அன்றே இத்தோல் தன்னை
அழகாய் அறுத்து அவன் தருவான்
இன்றே நீ சென்று அழைத்து வர
இனிதாய் தோலுடன் சென்றிடலாம்"

என்றது.

சில இடங்களில் தேடி அலைந்து ஒரு வழியாகத் தவளை தாத்தையா நரியைக் கண்டு பிடித்து விட்டது.

"நரியே நரியே நரியண்ணா
காட்டின் மந்திரி நீயண்ணா

ஊரில் இருந்து எனைத்தேடி
உருண்டு வந்த தங்கமுத்து
அழகு மேளம் ஒன்றைத்தான்
ஆக்கிட வேண்டும் என்றானே!
மேளம் செய்திட தோலைத்தான்
காங்கேயன் காளை தனதன்பு
தம்பியின் இறந்த உடல்தன்னில்
கணக்காய் எடுத்துக் கொள் என்றான்.
இறந்த அவனது தோலை நீ
உரித்து எனக்குத் தந்திட்டால்
இனிய மேளம் செய்திடுவேன்
இனிக்கும் இசையைத் தந்திடுவேன்"

என்று நரியிடம் தவளை தாத்தையா கூறியது.

தாத்தையாவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நரி, விரைந்து சென்று இறந்துபோன காளையின் உடலைப் பிரித்து அதன் தோலை மட்டும் தவளையிடம் கொடுத்து அனுப்பியது.

தோலைப் பெற்றுக் கொண்ட தவளை நரிக்கு நன்றி கூறிவிட்டு, விரைவாக எலி ஏகாம்பரனை அடைந்து அதனிடம் கொடுத்து விட்டு, சற்று மூச்சு வாங்கியது.

எலி ஏகாம்பரனும் மரங்கொத்தி மணிக் கழுத்தனின் துணையோடு, மேளத்தைச் செய்து அதை வேப்பமரப் பிசினால் ஒட்டி, இரு புறங்களிலும் காட்டெருமைத் தோலைக் கட்டி தவளை தாத்தையாவிடம் கொடுத்தன.

மேளத்தைக் கண்ட தவளைக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. தாவித் தாவி குதித்தபடியே! ஆடிப்பாடி சந்தோஷமாக மேளத்தை அடிக்கத் தொடங்கியது.

"டும் டும் டும் டும் மிருகங்களே!
டம் டம் டம் டம் கேளுங்களேன்!
டம் டம் டம் டம் மரங்கொத்தி
டும் டும் டும் டும் குடைந்தெடுத்து
டம் டம் டம் டம் ஏகாம்பரன் எலியவனும்
டும் டும் டும் டும் இனிதாய் செய்த மேளம்



இது
டம் டம் டம் டம் என்றே நான்
மேளம் ஒலித்திட நீங்களும் தான்
எழுந்தே வந்து ஆடுங்களேன்"

என பாடிக் கொண்டே ஆடியபடி குளக் கரையில் சென்ற தவளை தாத்தையாவின் கைகளிலிருந்த மேளம் கை நழுவிக் குளத்தினுள் விழுந்து விட்டது.

பாவம் தவளை தாத்தையா! மேளத்தை அடித்து அடித்து கைகள் விரிந்தபடியே நின்று விட்டன. இன்றுவரை தவளை அந்த மேளத் தைத் தேடி தண்ணீரில் விழுந்து தேடுவதை வாடிக்கையாகக் கொண்டு விட்டது.

இசையுடன் பாட ஆசைப்பட்ட தாத்தையா இன்றும் மழைக்காலங்களில் மேளம் இல்லாமல் பாடிக் கொண்டிருப்பதை நாமும் கேட்கலாம்!

தூத்துக்குடி மாவட்டச் சிறப்பிதழ்

டிசம்பர் இதழ் தூத்துக்குடி சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது.

அடுத்தது சேலம் மாவட்டச் சிறப்பிதழ்

சேலம் பள்ளி மாணவ, மாணவியர் தங்களின் படைப்புகளை அனுப்பி வைக் கலாம். கதைகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்கள் மட்டுமின்றி, உங்கள் மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசித் தேதி: 15.11.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.



தித்திக்கும் தீபாவளி!

தீபாவளிப் பண்டிகை இந்துக்கள் அனைவராலும் கொண்டாடப்படும் ஒன்று. இதைப் பற்றிய புராணக் கதைகளும், ஐதீகங்களும் நிறையவே உண்டு. தீபாவளி தமிழ் மாதமான ஐப்பசியில், அமாவாசைக்கு முன்தினம் இரவு வருகிறது. தீபாவளிப் பண்டிகை மிகப் பழைமையானது. ஐப்பசி மாத அமாவாசைக்கு முன் வரும் இரண்டு நாட்களான திரயோதசி, சதுர்த்தசி தினங்களும், அமாவாசையும், அதற்கு அடுத்த நாளான கார்த்திகை சுக்கில பிரதமை என நான்கு நாட்களும் தீபாவளி சம்பந்தப்பட்ட தினங்களாகும். தீபாவளி என்றாலே, 'தீபங்களின் வரிசை' என்று பொருள். எனவே, இந்த நாட்களில் வரிசையாகத் தீபம் ஏற்றிக் கொண்டாடுவதை ஒரு சடங்காகவே கொண்டுள்ளனர். தமிழர்கள் உட்பட்ட தென்னகத்தார், ஐப்பசி அமாவாசைக்கு முந்தைய இரண்டு தினங்களான திரயோதசி, சதுர்த்தசியை முக்கியமாகக் கொண்டு தீபாவளி கொண்டாடுவர்.

ஆனால் குஜராத்தியர், மார்வாரியர் போன்ற வட இந்தியர்கள், அமாவாசை தினத்தையும், அதற்கு மறு நாளான பிரதமை தினத்தன்றும் தீபாவளி கொண்டாடுகின்றனர்.

தமிழர்கள் தீபாவளி கொண்டாடும் முதல் தினமான சதுர்த்தசிக்கு 'நரக சதுர்த்தசி' என்று பெயர். அன்றைக்கு விடிவதற்கு நான்கு நாழிகை இருக்கும் போது, சூரியன் உதிக்குமுன் எழுந்து குளித்து, தீபமேற்றி, அதில் லக்ஷ்மி தேவியைத் தரிசிப்பது என்பது ஐதீகம். திருமால் – லக்ஷ்மிக்கு, எண்ணெய், பழம், வெற்றிலை-பாக்கு, தின்பண்டங்கள், புதுத்துணி வைத்து வழிபட வேண்டும். எண்ணெயில் லக்ஷ்மியும், நீராடும் நீரில் கங்கையும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. எனவே அன்று அதிகாலையில் நீராடியவர்கள் கங்கையில் நீராடிய பலன்



களைப் பெறுவார்கள்! பெரியோரும், குழந்தைகளும் புத்தாடை உடுத்தி, பலகாரங்கள் உண்டு, தீபமேற்றி, பட்டாசு கொளுத்தி தீபாவளியைக் கொண்டாடு





கொண்டாடுவதுண்டு. இறந்த முன்னோர்களாகிய பிதிர்கள், அவர்கள் வாழும் உலகத்திலிருந்தும், நரகத்தில் வாழும் முன்னோர்கள் அங்கிருந்தும் வந்து, பூவுலகில் தங்கி, சுற்றத்தார் கொடுக்கும் பிண்டம், தர்ப்பணம் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு அவரவர் உலகத்திற்குச் செல்வர் என்றும் கூறப்படுகிறது. எனவே தீபாவளிப் பண்டிகை இறந்தோர் நினைவாகக் கொண்டாடப்படும் பண்டிகையே!

மோகனா

கின்றனர்.

தமிழ்நாட்டில், மக்களைத் துன்புறுத்தி வந்த 'நரகன்' என்ற அசுரனைக் கிருஷ்ணன் கொல்லுவதாகவும், அவன் இறப்பதற்கு முன்பு, கடவுளான கிருஷ்ணனிடம் ஒரு வரம் கேட்பதாகவும், அதுதான், அவன் இறந்த தினத்தன்று, அவன் நினைவாகத் தீபமேற்றி, தின்பண்டம் உண்டு, புத்தாடை புனைந்து மக்கள் மகிழ்ந்திருக்க வேண்டுமென்று கேட்டதாகவும், அதன்படியே, மக்கள் தீபாவளியைக் கொண்டாடுவதாகவும் சொல்லப்படுகிறது. வட இந்தியாவில் தீபாவளியன்று, 'நரகாசுரன்' உருவங்களை எரித்து, கிருஷ்ணனுடைய வெற்றியைக்





பகுதிகளில், வாழும் இந்துக்கள், பெரும்பாலும் 'விக்கிரம சகாப்தம்' என்னும் ஆண்டு முறையைத்தான் பின்பற்றுகின்றனர். இதன்படி, வருடப் பிறப்பு 'கார்த்திகை' மாதத்தில்தான் இருக்கிறது. ஏனெனில் விக்கிரம சகாப்தத்தை உண்டாக்கிய விக்கிரமாதித்யன் என்னும் ராஜா, கார்த்திகை சுக்கில பிரதமையில்தான் சிம்மாசனம் ஏறி, பட்டாபிஷேகம் செய்து கொண்டாராம். எனவே அதிலிருந்து விக்கிரம சகாப்தம் தொடங்கிற்று என்று கூறுவர். பிரகலாதனுடைய பேரனும், மகாவிஷ்ணுவின் பேரனுமான, 'பாலிசக்ரவர்த்தி' அரசனான நாள் என்றும், அதன் நினைவாகவே 'பாலி பாரத்பத்' என்று புத்தாண்டு பிறப்பும் கொண்டாடப்படும். அன்று ஏற்றப்படும் தீபம் 'பாலி தீபம்' என்று 'வாமனபுராணம்' கூறுகிறது. மகாராஷ்டிராவின் சில இடங்களில் தீபாவளியன்று 'பாலியின் உருவம்' செய்து வழிபாடு செய்வார்கள். ராமர், இராவணனைத் தோற்கடித்து விட்டு, அயோத்திக்கு வந்த அன்று மக்கள் நகரத்தை அலங்கரித்து அணி செய்து, இரவில் தீபமேற்றி, மகிழ்ச்சியுடன் கொண்டாடும் நாளே 'தீபாவளி' என்றும் கூடச் சொல்லப்படுகிறது.


குஜராத்தியர், மார்வாரியர்களில் அமாவாசை பிரதமையன்று மாலை, வணிகர்களாக இருப்போர், பழைய கணக்கை முடித்து, புதிய கணக்கைத் தொடங்கும் சடங்குக்காக, கணக்குப் புத்தகங்களைப் பூஜை செய்யும், 'சாரதா பூஜை' என்று சொல்கின்றனர். இவர்கள் அதிர்ஷ்டம் உள்ளதாகக் கருதப்படும் நாணயத்தை வைத்து, லக்ஷ்மி பூஜையும் செய்வர். தீபங்களைக் கொண்டு வீட்டை அலங்கரிப்பார்கள். அன்றைய இரவுக்கு அகராத்திரி அல்லது யட்ச ராத்திரி என்று பெயர். யட்சராஜனான குபேரனுடைய பூஜை இரவில் நடக்கும். சில இடங்களில் சாரதா, லக்ஷ்மி மற்றும் குபேர பூஜை மறுநாள் காலையிலும் நடக்கும். அன்று இரவில் நடக்கும் யட்ச பூஜையில் ஒரு அங்கமாகச் 'சொக்கட்டான்' ஆட வேண்டும் என்றும், அதில் வென்றவர்களுக்கு, ஆண்டு முழுவதும் காரியங்களில் வெற்றி கிட்டும் என்றும், புராணங்கள் கூறுகின்றன. அன்று இரவு, பெண்கள் முறத்தைத் தட்டி, லக்ஷ்மியின் தமக்கையான மூதேவியை விரட்டுவார்களாம்.

இந்தியாவின் வடக்கு மற்றும் மேற்குப்

ஜைனர்களின் ஐதீகம் வேறுவிதமானது. இறந்த 'மகாவீரர்', இறந்த நிலையை எய்திய நாளையே தீபாவளி குறிக்கிறது என்கின்றனர். ஞானஜோதியாகிய மகாவீரர் உலகை விட்டு நீங்கியதற்கு ஈடாக, பூதஜோதிகளாகிய தீபங்கள் ஏற்றப்படுகின்றன. அக்பரின் ஆட்சிக் காலத்தில், தீபாவளி இரவில், அவரின் அரண்மனை விளக்குகளால் அலங்கரிக்கப்படுமாம்! ஷாஜகான் சக்கரவர்த்தியின் மகன் தபிரஹீரும் தீபாவளியைக் கொண்டாடுவாராம்! வங்கத்தின் நவாப் சிராஜ்-உத்தௌலா தீபாவளியைக் கொண்டாடினார். இன்றும் வங்கத்தில், தீபாவளியன்று காளி பூஜை செய்வார்கள். எப்படியாயினும் மக்கள் தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவிக்கவே பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர்.


வண்ணம் தீட்டுங்கள்!




விஞ்ஞானி கடத்தல்!
7
கதை, படம்: முத்து
BLUE STAR
இதோ ஹோட்டல் ப்ளூ ஸ்டார்.
அங்கிள், நீங்க போய்ப் பார்த்துட்டு வாங்க.
ஹோட்டலுக்குள் நுழைந்தான் ஆகாஷ்.
308
307
306
ரூம் நம்பர் 307
யெஸ், யார் வேணும்?
மிஸ்டர் மாரி?
ஸாரி. நான் வந்து ஒரு வாரம் ஆச்சு. முன்னாலே இருந்தவங்களைப் பற்றித் தெரியாது.
ஜீப்பில் ஏறினான் ஆகாஷ்.
ஒரு வாரத்துக்கு முன்னாலேயே காலி பண்ணிட்டுப் போயிட்டானாம்.
அடுத்து என்ன பண்ணலாம் அங்கிள்?
மறுபடியும் காட்டிலேயே போய்த் தேடலாம்.


அங்கே தானே அவன் மந்திரவாதியாக வேஷம் போட்டுக் கொண்டு வந்தான்?
இதற்கிடையில், மலை அடிவாரத்தில் ஒரு குகைக்கு அருகில் மாரியும் அவன் சகாவும் -
இதை வச்சு என்ன பண்றது?
விஞ்ஞானி நமக்காக மறு படியும் ஆராய்ச்சி செய்யப் போறார். அவர் கண்டுபிடித்த ஃபார்முலாவை தொலைத்து விட்டாராம்.
அண்ணா, உங்களுக்கு சூப்பர் மூளை!
அண்ணனா! முட்டாள், இனிமேல் நான் உனக்கு பாஸ்.
இந்த ஆளை ஹிப்னாடைஸ் பண்ணி நம் வழிக்குக் கொண்டு வந்திருக்கேன்.
அதே நேரம், நகரின் ஒதுக்குப் புறமான பங்களாவில் –


அந்தக் கிழவனின் மூளை அப்படி எதைக் கண்டுபிடித்திருக்கிறது? ஒருவேளை நமக்குப் பயன்படற விஷயமாக இருக்கலாம்.
அப்படி ஒரு விஷயமும் இருக்காது பாஸ்.
அப்படின்னா, மாரி எதுக்கு விஞ்ஞானியைக் கடத்தணும்? இதில் ஏதோ மர்மம் இருக்கு.
ஆமாம்... அந்தக் கிழவனைத் தேடி மூன்று பேர் சுத்திக்கிட்டு இருக்காங்க. அவங்ககிட்ட மாட்டினால் அவ்வளவுதான்!
எனக்கு அடி பட்டதும் அவங்களால தான்.
பில்லியும் விக்கியும் கிளம்பினர்.
சரி, நான் கிளம்பறேன். எதுவும் தகவல் கிடைச்சா போன் பண்ணு.
அப்போது ஆகாஷின் ஜீப் சென்றது.
அங்கே பாரேன்... அந்தப் பிசாசுகள் போகிறார்கள்.


அவர்களைப் பின் தொடர்ந்தால் ஏதாவது தகவல் கிடைக்கும்.
எனக்கென்னவோ பயமா இருக்கு.
இருவரும் ஜீப்பைப் பின் தொடர்ந்தனர்.
ரெண்டு பேர் நம்மைப் பின் தொடர்ந்து வர்றாங்க.
அவங்க வந்தால் நமக்குத் தொல்லைதான்.
ரகு, அந்தத் துப்பாக்கியை இப்படி கொடு.
ஜானு துப்பாக்கியால் சுட்டாள்.
ஹே!
ம் மா!!!
ஆ
கீழே விழுந்த விக்கி ஜீப்பின் டயரைக் குறி வைத்து சுட்டான்.
(தொடரும்)

சடுகுடு ஆடுது எலி !

அடடா, அறையில் எலி ஒன்று,
ஆடுது சடுகுடு என்னோடு;
கதவுகள் இல்லா அலமாரி,
கட்டுக் கட்டாய்ப் புத்தகங்கள்,

கட்டில், மேஜை, கண்ணாடி
வேட்டி, சட்டைத் துணி மணிகள்;
இப்படி இருக்கும் என் அறையில்
எப்படி பிடிப்பேன் எலியினவே?

எடுத்தேன் ஏதோ கழியொன்று
விடுத்தேன் வீசி எலி மீது
விழுந்தது கீழே - கண்ணாடி
உடைந்தது சிதறித் தூள் தூளாய்!

புகுந்தது புத்தகக் காட்டுள்ளே,
போட்டேன் கழியால் ஒரு போடு;
சரிந்தது புத்தகம் தலை மீது
விரைந்தது எலியும் வேறெங்கோ,


வாசல் சன்னல் விளிம்பினிலே
வைத்தேன் வாசனை வடைத்துண்டு;
பாய்ந்தது எலியும் புசித்திடவே
பட்டென அடைத்தேன் சன்னலையே

வெற்றி, வெற்றி என் திட்டம்
சற்றே அமர்ந்தேன் ஓய்வாக,
அறைமுன் கதவு வழியாக
அய்யோ வந்தது எலி மீண்டும்!



— ஆர்.பி. சாரதி

இங்கு ஆறு வேலைகள் வரிசை மாறியுள்ளன. எப்படி மாற்றியமைத்தால் ஒரு வீட்டைக் கட்டி முடிக்கலாம்?



விடை 24ம் பக்கம்


பாண்டவர் வனவாச காலத்தில் அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற சிவபெருமானை நோக்கித் தவமிருந்தான். சிவபெருமான் அருளால் பாசுபதாஸ்திரம் கிடைத்தது. இந்திரன் தேரோடு வந்து "அர்ஜுனா! மூன்று கோடி நிவாத கவசர்களையும், அறுபதாயிரம் கால கேயர்களையும் கொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

அர்ஜுனன் வியப்புடன், "தேவர்கள் அமிர்தம் உண்டவர்கள். அதிக பலம் பெற்றவர்கள். அவர்களால் முடியாததையா நான் செய்து விடுவேன்?" என்று கேட்டான்.

"முசுகுந்த சோழர், புரூரவஸ் போன்ற பலர் தேவர்களிலும் பலம் பெற்று அசுரர்களை முடித்திருக்கிறார்கள்! பேசவும், உண்ணவும் தெரிந்த வாயால் பார்க்க முடியாதல்லவா? அதுபோலத்தான் இதுவும்! புறப்படு" என்றான்.

தேவலோகம் வந்த அர்ஜுனன், "நான் போரிட வேண்டிய எதிரிகளைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"கடல் நடுவே ஒரு பெரிய நகரத்தை அமைத்து அதற்குத் தோயமாபுரம் என்று பெயர் சூட்டி மூன்று கோடி அசுரர்கள் வாழ்கிறார்கள். மகாமேருவில் பல்லாண்டு காலம் தலைக்கீழாய் தவம் செய்து, பல அரிய வரங்கள் பெற்றிருக்கிறார்கள்.



"இவர்கள் சினத்தோடு பெருமூச்சு விட்டால் பகைவர் மயங்கிச் சாய்வார்கள். ஏழு சமுத்திரங்களையும் ஒரே சமயத்தில் உண்டு





திடீரென உமிழ்ந்து, எதிரிப்படையை மூழ்கடித்து விடுவார்கள். அந்தச் சமயத்தில் நாங்கள் பறந்து தப்பிக்கிறோம். இவர்கள் கால்களை வேண்டுமளவு நீட்டி, கடலைத்தாண்டி விடுவார்கள். வாயையும் இஷ்டத்துக்குத் திறந்து ஒரு படையையே விழுங்கி விடுகிறார்கள். இவர்கள் பற்களும் கத்தி போல் வளர்ந்து, எதிரிகளைக் குத்தி அழிக்கும் வல்லமையுடையது. பேசினால் இடி இடிப்பது போலிருக்கும். இவர்களின் கை, கால், தலை என்று எதை வெட்டிப் போட்டாலும் நொடியில் ஒன்று சேர்ந்து பிழைத்து எழுவார்கள். இவர்கள் மூன்று கோடி பேருடைய கையும், வாயும் ஒரே சமயத்தில் சேரும் போது தான் மரணமடைய வேண்டும் என்று வரம் பெற்றிருக்கிறார்கள்!


"அதனால் இவர்கள் ஒரே சமயத்தில் சாப்பிடுவதே இல்லை! இவர்களே நிவாத கவசர்கள்.

"காலகை, புலோமை என்ற அசுர சகோதரியர் பல காலம் பிரம்மாவை நோக்கித் தவம் செய்து, பறக்கக் கூடிய செம் பொன் நிறமான ஒரு நகரத்தைப் பெற்றார்கள். இரண்யாட்சனின் வழியில் வந்த இவர்கள், அந் நகரத்துக்கு இரண்ய நகரம் என்று பெயர் சூட்டினர். காலகையின் வம்சத்தில் வந்த அசுரர்கள் கால கேயர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் அறுபதாயிரம் பேர். திடீர் திடீரெனப் பறந்து வந்து கீழிறங்கி, தேவர்களைப் பயமுறுத்துகின்றனர்.

கையும் வாயும் சேருமா?

"ஒற்றை மனிதனால் மட்டுமே மரணம் வரலாம் என்று வரம் பெற்றவர்கள்! தேவ, முனிவர்களாலும், மும்மூர்த்திகளாலும், பெண்களாலும், யட்ச, கந்தர்வ, சித்த, வித்யாதரர்களாலும் இவர்களுக்கு மரணம் நேராது" என்று விளக்கினான் தேவேந்திரன்.

"நிவாத கவசர்களிடமிருந்தும், காலகேயர்களிடமிருந்தும் உங்களைக் காப்பாற்றுவேன்" என வாக்களித்து, கவசம் பூண்டு போருக்குப்



ஆர்.பொன்னம்மாள்

புறப்பட்டான் அர்ஜுனன். இந்திரனது தேரில் மாதலி தேரோட்ட, தேவர்கள் வாழ்த்தி வழி அனுப்பினர்.

சித்திர சேனன் என்ற கந்தர்வனிடம் அர்ஜுனன் பெரும் படையுடன் போருக்கு வருவதைச் சொல்லி அனுப்பினான் இந்திரன்.

போர் முகப்பில் நிவாத கவசர்களைக் கண்டவுடனேயே அர்ஜுனன், "நீங்கள் மாயப் போர் செய்வதில் தான் வல்லவர்கள். ஆயுதம் எடுத்துப் போரிட சக்தியற்றவர்கள்; வில் வித்தை தெரியாதவர்கள் என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். பழி துடைப்பதே வீரனுக்கு அழகு! நீங்கள் எப்படி?" என்று தூண்டினான்.

அவர்கள் மாய யுத்தத்தை விலக்கி ரோஷத்தோடு போரிட்டனர். அர்ஜுனன் பாண மழை பொழிந்தான். முடிவே இல்லாமல் இருக்கிறதே என்று அர்ஜுனன் யோசித்தான். அவன் முகம் பிரகாசமாயிற்று. வில்லில் பாசுபதாஸ்திரத்தைப் பூட்டி சிவபெருமானைப் பிரார்த்தித்தான்.

"மாதலி! ரதத்தைத் திருப்பி ஓட்டு"என ஆணையிட்டான்.

மாதலிக்கு எதுவும் புரியவில்லை! ஆனாலும் எஜமானன் சொற்படி கேட்பது கடமையாயிற்றே! 'ஆக்ரோஷத்தோடு போர் புரிந்தவருக்கு என்னவாயிற்று?'என்று சிந்தித்தபடி தேரைத் திருப்பிச் செலுத்தினான்.

மூன்று கோடி பேரும் முதலில் வியந்தனர். பிறகு இகழ்ந்து சிரித்தனர்.

''நாம் ஒவ்வொரு அஸ்திரத்தையும் செலுத்திவிட்டு சீழ்க்கை ஒலி எழுப்புகிறோம். ஒவ்வொரு முறை பிழைத்து எழும்போதும் சீட்டி அடிக்கின்றோம்! இதற்கே இந்த மானிடன் பயந்து புறமுதுகிட்டு ஓடுகிறான்! ஒரே சமயத்தில் மூன்று கோடி பேரும் சீழ்க்கை அடித்து அவன் குதிகால் முனை பிடரியில் பட ஓடுவதைப் பார்க்க வேண்டும்" என்றான் மூத்த நிவாத கவசன்.

அனைவரும் அதற்குச் சம்மதிக்கவே ஏக காலத்தில் வாயில் கை வைத்து சீழ்க்கை ஒலி எழுப்பினர்.

சடாரென்று திரும்பிய அர்ஜுனன் பாசுபதாஸ்திரத்தை விட, அனைவரும் கூழாகி, சிதைந்தனர். பாசுபதாஸ்திரம் பறந்து சென்று பொய்கையில் மூழ்கி, தன்னைப் புனிதப்படுத்திக் கொண்டு அர்ஜுனன் கைக்கு வந்தது.

அர்ஜுனனின் புத்திக் கூர்மையைக் கண்டு மாதலி பிரமித்தான்!

"உங்களுக்கு எப்படி இது தோன்றியது?" என்று கேட்டான்.

"இறைவன் அருள். அசுரர்கள் அடிக்கடி இப்படி உற்சாகத்தைக் காட்ட சீழ்க்கை ஒலித்ததே இப்படி நடந்து கொள்ள வைத்தது! சரி, இனி இரணியபுரத்துக்குப் போகலாம்" என்றான் அர்ஜுனன்.

நிவாத கவசர்கள் மடிந்ததைக் கேட்டு கலக்கமுற்றிருந்த கால கேயர்கள் கழுகுகள், பூதங்கள், சிங்கங்கள் பூட்டிய தேர்களில் யுத்த முனைக்கு வந்தனர்.

அவர்கள் மாயையால் ஆகாய மெங்கும் இரண்யபுரங்களாக இருந்தது. மீண்டும் சிவபெருமானைப் பிரார்த்தித்து மூன்று முகங்களையுடைய பாசுபதாஸ்திரத்தை ஏவினான். அது உண்மையான இரண்ய நகரத்தை அழித்தது. நிஜ நகரம் அழிந்ததும் மாயா நகரங்கள் மறைந்தன. நகரத்துள் மறைந்திருந்த அறுபதாயிரம் கால கேயர்களும் குடும்பத்தோடு மடிந்தனர். தேவர்கள் அர்ஜுனனைக் கொண்டாடி வரவேற்க, ஐராவதத்தில் ஏற்றி, 'விஜயன்' எனப் பெயர் சூட்டி ஊர்வலம் விட்டான் இந்திரன். பல சிறந்த அஸ்திரங்களைப் பரிசளித்து கௌரவித்தான். பிரம்மாவால் தனக்கு அளிக்கப்பட்ட நவரத்ன கிரீடத்தைச் சூட்டி 'கிரீடி' என்று பட்டமளித்தான்.

கடலா, ஏரியா?

காஸ்பியன் ரஷ்யாவில் உள்ளது. இதை ஏரி என்றும் கடல் என்றும் கூறுகிறார்கள். இதன் பரப்பளவு 1.6 லட்சம் சதுர மைல்கள். ஏரி என்று எடுத்துக் கொண்டால் உலகிலேயே மிகவும் பெரியது இதுதான். கடல் என்று எடுத்துக் கொண்டால் உலகிலேயே மிகவும் சிறியது இதுதான்.

— *எஸ். மோகன்ராஜ், சீர்காழி.*





• ஜார்ஜ் வாஷிங்டன்

தூக்கினார்!

ஒருமுறை அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் குதிரை மீது சவாரி செய்தபடி ஒரு காட்டுப் பாதையில் சென்று கொண்டிருந்தார். அவ்வழியில் சிலர் மரத்தை வெட்டி அதைத் தூக்க முயற்சி செய்து கொண்டிருந்தனர். மேஸ்திரி ஒருவர் அவர்களைப் பார்த்து "தூக்குங்கள்... தூக்குங்கள்" என்று கத்திக் கொண்டே இருந்தார். அந்த மேஸ்திரி ஒரு கை கொடுத்து மரத்தை எளிதில் தூக்கியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. இதைக் கண்ட வாஷிங்டன் குதிரையிலிருந்து இறங்கி தானும் ஒருகை கொடுத்து மரத்தைத் தூக்கி விட்டார்!

— கே. என். மகாலிங்கம்,
பாண்டிச்சேரி.



• பெரியார்

நாய்க்குத் தெரியுமா பழமொழி?

நாய் அறியாது

சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த பாஷ்யம் ஐயங்கார் தம்முடைய ஓய்வு நேரத்தில் வெள்ளைக்கார அதிகாரி ஒருவருக்குச் சமஸ்கிருதம் சொல்லிக் கொடுத்து வந்தார்.

ஒரு நாள் அந்த வெள்ளையர் வீட்டிற்குள் பாஷ்யம் ஐயங்கார் நுழைந்தார். அங்கே இருந்த நாய் பாய்ந்து குரைத்தது. அதனால் ஐயங்கார் பயந்து ஓடினார்.

அதைகண்ட வெள்ளையர் சிரித்துக் கொண்டே வந்து, "என்ன ஐயங்கார் குரைக்கிற நாய் கடிக்காது என்ற பழமொழியை மறந்து விட்டீர்களா?" என்றார்.

"நண்பரே! அந்தப் பழமொழியை நீங்கள் அறிவீர்கள். நானும் அறிவேன். ஆனால் குரைக்கிற நாய்க்கு அது தெரியுமா?" என்று சாமர்த்தியமாகப் பதில் கூறினார்.

— எஸ். மணிமொழி,
திருவண்ணாமலை.

மரியாதை!

தந்தை பெரியார் ஒரு கலையரங்கிற்குச் சென்றிருந்தார். அவருக்கு முன்னால் அமர்ந்திருந்த ஒருவர் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தார். அருகிலிருந்த ஒருவர் பெரியாரிடம் "உங்களுக்கு மரியாதை குறைவாக அவர் எப்படி கால்மேல் கால் போட்டு உட்காரலாம்?" என்று வருத்தப்பட்டார். உடனே

வழிகாட்டும் நட்சத்திரங்கள்...

பெரியார் "அவர் கால் மீது கால் போடுவதால் என் மரியாதை எப்படி குறையும்?" என்றார். அருகிலிருந்த நபர் பெரியாரின் எண்ணத்தை எண்ணி வியந்தார்.

— மு. சுகன்யா, சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்.

உணவு...

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வில்சனின் தந்தை ஒரு கிராமத்தின் மாதா கோயிலில் பாதிரியாராக இருந்தார். ஒரு நாள் அவர் மாதா கோயிலில் உபன்யாசம் முடித்து விட்டுத் தமது குதிரை மீதமர்ந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவன் பாதிரியாருக்கு வணக்கம் தெரிவித்து, "ஐயா, தங்கள் குதிரை நல்ல புஷ்டியாக கொழு கொழுவென்று இருக்கிறது. நீங்களோ எலும்புந்தோலுமாக மிகவும் பலவீனமாக இருக்கிறீர்களே" என்று கேலி செய்யும் நோக்கில் கேட்டான்.

பாதிரியார் கலகலவென சிரித்து விட்டு, "நீங்கள் கேட்கும் விஷயமாக ஒரு ரகசியத்தைக் கூறுகிறேன். என் குதிரைக்கு நான் உணவு அளிக்கிறேன். அதனால் அது கொழு கொழுவென்று இருக்கிறது. எனக்கு உணவளிப்பதோ உங்களையொத்த கிராம மக்கள் தான்" என்றார்.

— ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபி.

அதிக விலை!

ஒரு சமயம் அறிஞர் பிளாட்டோவிடம் செல்வந்தர் ஒருவர் வந்தார். "என் மகனுக்கு நீங்கள் கல்வி கற்றுத் தாருங்கள். அதற்கு எவ்வளவு பணம் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஐந்நூறு பவுண்டுகள்" என்றார் பிளாட்டோ. "என் மகனுக்குக் கல்வி கற்றுத்தர ஐந்நூறு பவுண்டுகளா? இந்த விலையில் ஓர் அடிமையையே விலைக்கு வாங்கி விடலாமே!" என்று கேட்டார் செல்வந்தர்.

"நீங்கள் சொல்வதும் சரிதான். இந்தத் தொகைக்கு ஓர் அடிமையையே வாங்கிக் கொள்ளுங்கள். அப்படி ஓர் அடிமையை நீங்கள் விலைக்கு வாங்கிக் கொண்டால் உங்கள் மகனையும் சேர்த்து இரண்டு அடிமைகள் உங்கள் வீட்டில் இருப்பார்களே!" என்று பதில் அளித்தார் பிளாட்டோ. செல்வந்தர் முகத்தில் ஈயாடவில்லை.

— குட்டி பிரசன்னா, கரூர்.



• கண்ணதாசன்

காத்திருந்தார்!

உலகப் புகழ் பெற்ற கவிஞர் வால்ட் விட்மனின் மகள் சென்னைக்கு வந்திருந்தார். அவரும் ஒரு கவிஞர் தான்.

இதைக் கேள்விப்பட்ட கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வால்ட்விட்மனின் மீதுள்ள பற்றால் அவரது மகளைக் காண, அவர் தங்கியிருந்த கன்னிமாரா ஹோட்டலுக்குச் சென்றார்.

அங்கு, "உங்கள் விசிட்டிங் கார்டைக் கொடுங்கள். காண்பித்து கேட்டுச் சொல்கிறோம்" என்றார் காவலாளி. உடனே ஒரு துண்டுச் சீட்டை எடுத்து எழுதிக் கொடுத்தார். அடுத்த நிமிடம் அந்த அம்மையார் தானே வெளியில் வந்து, இவரை வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்றார்.

இருவரும் நீண்ட நேரம் பேசி, புகைப் படங்கள் எடுத்துக் கொண்டனர். அந்தச் சீட்டில் கண்ணதாசன் அப்படி என்ன தான் எழுதியிருந்தார் தெரியுமா?

'புகழ்பெற்ற கவிஞர் வெளியில் நிற்கிறார்.'

— எம். வினோத், சங்கரன்கோவில்.



புதிர்... புதிர்...

I. நான் தினமும், என் அப்பா இரண்டு நாட்களுக்கு ஒருமுறையும், என் அம்மா மூன்று நாட்களுக்கு ஒருமுறையும், என் தங்கை நான்கு நாட்களுக்கு ஒருமுறையும் நூலகம் செல்வோம். நாங்கள் கடைசியாக நவம்பர் ஒன்றாம் தேதி எல்லோரும் நூலகத்திற்குச் சென்றோம். அடுத்து எப்போது நாங்கள் ஒன்றாக நூலகத்திற்குச் செல்வோம்?

II. நானும், என் நண்பனும் ஒரு முக்கோண வயலின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் சென்றோம். நான் 20 மீட்டர் தூரம் நடந்தேன். என் நண்பன் 28 மீட்டர் நடந்தான். நாங்கள் இருவரும் ஒரே முனையை வந்தடைந்தோம் எப்படி?

— **மு. மோசஸ் பிரவின் ஞானக்குமார், ஒன்பதாம் வகுப்பு, சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்.**

III. ஒருவனிடம் வினோதமான குதிரை ஒன்று இருந்தது. அது மணிக்குச் சரியாக 60 கி.மீ. வேகத்தில் ஓடக் கூடியது. ஆனால் அந்தக் குதிரையோ பத்து கி.மீ. முன்னோக்கி ஓடினால் 5 கி.மீ. பின் பக்கமாக ஓடும். அதன் பிறகு பத்து கி.மீ. முன்னோக்கியும், ஐந்து கி.மீ. பின்னோக்கியும் ஓடும். இப்படிப்பட்ட இயல்புடைய குதிரை அது. அப்படியானால், திறமையுடைய குதிரையோட்டி ஒருவன் அந்தக் குதிரையில் அமர்ந்து ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தை எவ்வளவு நேரத்தில் கடப்பான்?

— **ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.**


IV. அந்தக் கிராமத்தில் கில்லாடி திருடன் ஒருவன் சில நாட்களாகவே மக்கள் அடுக்குப் பானையில் சேமித்து வைத்திருக்கும் தானியங்களில் தனது கை வரிசையைக் காட்டி வந்தான். ஒவ்வொரு வீட்டிற்கும் திருடச் செல்லும் பொழுது ஒரு மூட்டையைத் தோளில் சுமந்து செல்வது அவனது வழக்கம். இதில் அதிசயம் என்னவென்றால், அவன் திருடிவிட்டுச் சென்ற பிறகு வீட்டுக்காரர் அடுக்குப் பானை



யைச் சோதிக்கும் பொழுது பார்வைக்குத் தானியங்கள் திருடப் படாதது போலவே தோன்றும். அது எப்படி?

— **தேனி பிரபு**

V. அ) ஒரு பந்தயத்தில் மூன்று பேர் கலந்து கொண்டார்கள். அப்பந்தயத்தில்



முதலில் வந்தவனுக்கு மூன்றாம் பரிசு கிடைத்தது! ஏன்?

ஆ) ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டில் நிறையத் தண்ணீர் இருக்கிறது. அதில் இருந்து முகரக் கூடாது. அந்த பக்கெட்டில் எதைப் போட்டால் தண்ணீர் குறையும்?

இ) ஒரு பண்ணையில் 100 மாடுகள். நூறு பண்ணைகளில் 10,000 மாடுகள், ஏழாயிரம் பண்ணையில் எத்தனை மாடுகள் இருக்கும்?

— பி. சுசீலா,
ஏரிப்பாளையம்,
உடுமலைப்பேட்டை.


VI. ஒரு ஆட்டுச் சந்தையில் ஆடுகள் வாங்க கந்தன் சென்றான். ஒரு ஆண் ஆட்டின் விலை ரூ. 10/- பெண் ஆட்டின் விலை ரூ. 5/- குட்டி ஆட்டின் விலை ரூ.0.50. கந்தன் கையில் ரூ.100/- உள்ளது. அவன் ரூ.100/- மட்டுமே செலவழித்து 100 ஆடுகளை வாங்கிச் சென்றான். எப்படி?

— லோ. தரணிகுமார்,
பன்னிரண்டாம் வகுப்பு,
திருக்கழுக்குன்றம்.

விடைகள்

I. 12 நாட்களுக்கு ஒருமுறை ஒன்றாகச் செல்வோம். (நவம்பர் 13)

II. நான் கர்ணம் வழியே நடந்தேன், என் நண்பன் பக்கங்கள் வழியாக நடந்தான்.



III. திறமையான குதிரையோட்டி,குதிரை முன் பக்கமாக ஓடும்போது குதிரையை முன் பக்கமாகவும், குதிரைப் பின்பக்கமாக ஓடும் போது பின்பக்கமாகவும் நிறுத்துவான். ஆகவே, அக்குதிரையோட்டி 50 நிமிடங்களில் 50 கி.மீ. தூரத்தைக் கடந்திருப்பான்.


IV. அவன்தான் கில்லாடி திருடனாயிற்றே. அடுக்குப் பானையிலிருக்கும் தானியங்களை எடுத்துவிட்டுத் தனது கில்லாடித் தனத்தால் தான் சுமந்து செல்லும் மூட்டையிலிருந்த மணலை அதில் நிரப்புவான். மணலின் மேலே சிறிதளவே தானியத்தைப் பரப்பி தானியங்கள் திருடப்படாதது போல் ஜோடனை செய்து விடுவான்.

V. அ. அது ஸ்லோ சைக்கிள் ரேஸ்,
ஆ. ஓட்டைப் போட வேண்டும்.
இ. ஏழாயிரம் பண்ணை என்பது ஓர் ஊரின் பெயர். அங்கு போய்த்தான் எத்தனை மாடுகள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

VI.

ஆண் ஆடு	1 x 10	= 10
பெண் ஆடு	9 x 5	= 45
குட்டி ஆடு	90 x 0.5	= 45
	100	100

விடை








தர்மபுரி ஸ்பெஷல்

சுற்றுலாத் தலங்கள்

தர்மபுரி மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களாக உள்ளவை, ஒகேனக்கல், தீர்த்தமலை, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், தூவல் நீர்வீழ்ச்சி, அனுமன் தீர்த்தம், மத்திகிரி கால்நடைப் பண்ணை, ஒசூர் சிப்காட், அதியமான் கோட்டைக் கோயில், ஒசூர் அருகே உள்ள தொரப்பள்ளியில் ராஜாஜி பிறந்த இடம், பாப்பாரப்பட்டியில் சுப்ரமணிய சிவா நினைவு இல்லம் ஆகியவை. தர்மபுரியில் மாம்பழம் பிரபலம். வருடந்தோறும் நடைபெறும் மாம்பழக் கண்காட்சியைக் கண்டு ரசிக்கலாம்!

தொழில் நகரம்

முக்கியத் தொழில் நகரமாக உள்ளது ஒசூர். இவ்வூர் கர்நாடக மாநில எல்லை ஓரத்தில் அமைந்துள்ளது. ஒசூரில் ஏராளமான தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இதன் மூலம் ஆயிரக்கணக்கான



ஆண்களும், பெண்களும் வேலை வாய்ப்பு பெற்று பயனடைந்து வருகின்றனர். ஓசூரில் 'டைட்டன்' கடிகார கம்பெனி, அசோக் லேலண்ட் வாகன தயாரிப்பு கம்பெனிகளும் மற்றும் டி.வி.எஸ். வாகன தயாரிப்பு கம்பெனியும் முக்கியமானவை.

கோட்டை

ஓசூர் வட்டம் கீழ மங்கலத்தில் இருந்து ஐந்தாவது கி.மீ. தூரத்தில் உள்ளது அஞ்செட்டி துர்கம். இங்கு மலையின் மீது திப்பு சுல்தான் கோட்டை கட்டினார். மலை மீது லிங்கம் - நந்தியுடன் கூடிய கோயில் ஒன்றும் உள்ளது. மலை மீது உள்ள குளத்தில் கோடையில் கூடத் தண்ணீர் இருக்கும்!

கிருஷ்ணகிரி அணை

இங்குள்ள அணைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அணையாக உள்ளது கிருஷ்ணகிரி அணையாகும். இந்த அணையின் நீர்ப் பாசன வசதியின் மூலம் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

இந்த அணை தவிர மாவட்டத்தில் பல சிற்றணைகளும் உள்ளன. அவை சின்னாறு அணை, பாம்பாறு அணை, நாகவதி அணை, தும்பல அள்ளி அணை, வாணியாறு அணை, ஈச்சம்பாடி அணை, கெவரப் பள்ளி அணை ஆகியவை.

குகையில் ஓவியம்

பல குகை ஓவியங்கள் இருந்துள்ளதை வரலாற்று வல்லுநர்கள் கண்டுப்பிடித்துள்ளனர். தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஓவியங்களில் முதல் குகைக் கோயில் ஓவியம் என்ற பெருமையை பர்கூர் அருகே உள்ள 'மல்லப்பாடி' என்னும் ஊர் பெற்றுள்ளது. குகை ஓவியங்கள் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

தீர்த்தமலை

மலைக் கோயில்களுள் புனிதமான சிவன் கோயில் ஸ்தலமாக உள்ளது 'தீர்த்த மலை'யாகும். எந்த வறட்சி ஏற்பட்டாலும் மலையின் மீது புனித தீர்த்தம் சிறு அருவியாகக் கொட்டுவதால் 'தீர்த்த மலை' என வழங்கப்படுகிறது.

விசித்திர ஊர்கள்

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள சில ஊர்



தர்மபுரி ஸ்பெஷல்

களின் பெயர்கள் வினோதமாக இருக்கும். ஊத்தங்கரைக்கு அருகே உள்ள ஊரின் பெயர் காட்டேரி. பர்கூருக்கு அருகே உள்ள ஓர் ஊரின் பெயர் ஒன்பது பனை மரம். போச்சம் பள்ளிக்கு அருகே உள்ள ஊரின் பெயர் எலுமிச்சம் பள்ளம்.

— பி. கோவிந்தசாமி,
ஊத்தங்கரை



• ராஜாஜி

தர்மபுரி தந்த தலைவர்

மூதறிஞர் என்றும், சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி என்றும் அழைக்கப்படும் ராஜாஜி அவர்கள் தர்மபுரி மாவட்டம், ஓசூர் அருகிலுள்ள தொரப்பள்ளி கிராமத்தில் பிறந்தவர்.

— கிருஷ்ணா,
தஞ்சை

சுவையான தகவல்கள்

* 17ம் நூற்றாண்டில் ஜெகதேவி ராயன் என்ற சிற்றரசன் 'தகடூர்' என்ற பகுதியை ஆண்டான். அதுதான் 'தர்மபுரி' என பின் அழைக்கப்பட்டது.
* திப்பு சுல்தானிடமிருந்து பெறப்பட்ட சேர்வராயன் மலையின் வடக்கிலுள்ள பகுதிகள் 1965ல் ஒருங்கிணைக்கப்பட்டு 'தர்மபுரி' மாவட்டம் என உருவாகியது.
* தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர் ஒரு தொழில் நகரம், 'ஓசூர்' என்பது கன்னடப் பெயர். இதற்குப் பொருள் 'புதிய ஊர்.'

— வி. ராதாகிருஷ்ணன்,
தஞ்சாவூர்

ஓசூர் அருகே சூலகிரி என்ற மலை இருக்கிறது. மலையின் தோற்றம் சூலம் (ஈட்டி) போல இருக்கும். சூலகிரியில் வரதராசப் பெருமாள் கோயில் உள்ளது. ஒவ்வொருநாளும் சூரியன் மறையும் போது இறைவனின் பாதத்தில் சூரிய ஒளிப்படும்.

சூலகிரிக்கு எட்டு கி.மீ. தொலைவில் அங்குச கிரிமலை உள்ளது. இது யானையை அடக்கும் அங்குசம் போல இருக்கும்.

— இராஜேந்திரன்,
மதுரை

எல்லைகள்


கிழக்கே வேலூர், விழுப்புரம் மாவட்டம் மேற்கே கர்நாடக மாநிலத்தின் பெங்களூர், மைசூர் மாவட்டங்கள் வடக்கே கர்நாடக மாநிலம் மற்றும் தெற்கே சேலம் மாவட்டம் தர்மபுரி மாவட்டத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன.

பெயர்க் காரணம்

தர்மபுரி என்னும் பெயர் அவ்வூரை ஆண்ட தர்மராஜா மன்னர் பெயரால் ஏற்பட்டதாகக் கூறுவர். தர்மபுரி மாவட்டத்தில் தர்மராஜா எழுப்பிய கோவில் இருக்கிறது. இதன் காரணமாகவும் தர்மபுரி என்று பெயர் பெற்றது. தர்மபுரியின் தொன்மை பெயர் தகடூர் என்பதே ஆகும். கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரை இப்பெயரே வழங்கப்பட்டு வந்தது.

தமிழ் நாட்டை ஆண்ட அதியமான் மன்னன் ஆட்சி செய்த பகுதி. இவர் இயற்பெயர் நெடுமானஞ்சி என்றும் வழங்குவர். கடையெழு வள்ளல்களுள் ஒருவராக இவர் விளங்கினார்.

— ச. அழகுவேல்,
பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
க.கருமத்துப்பட்டி,
திண்டுக்கல்



சிந்திக்க வைக்கும் சிரிப்புகள்

கற்பனையில் சிரிப்பவன்
கவிஞன்
கண்டவுடன் சிரிப்பவன்
காரியவாதி
ஓயாமல் சிரிப்பவன்
பைத்தியக்காரன்
ஓடவிட்டுச் சிரிப்பவன் வஞ்சகன்
தெரிந்து சிரிப்பவன் நடிகன்
தெரியாதென்று சிரிப்பவன்
ஏய்ப்பவன்
உழைக்காமல் சிரிப்பவன்
ஊதாரி
உட்கார்ந்து சிரிப்பவன்
சோம்பேறி
துன்பத்தில் சிரிப்பவன்
மனிதன்.

— பு. அருள்,
பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள்
மேல் நிலைப் பள்ளி,
பெண்ணாகரம் அஞ்சல்,
தர்மபுரி மாவட்டம்


தர்மபுரி ஸ்பெஷல்


"ஏங்க, உங்க வீட்டில் டீ.வி. வாங்கலை?"

"என் பையன் படிப்பு கெட்டுவிடும் என நினைத்தேன்."

"இப்போ எங்கே அவன்?"

"பக்கத்து வீட்டில் டீ.வி. பார்க்கிறான்!"





ஃபேன்: நீ ரொம்ப நல்லா பளபளப்பா ஜொலிக்கிறே.

டியூப்லைட்: நீ ரொம்பத்தான் சுத்தாதே!

— பி. லாவண்யா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ விஸ்வபாரதி மெட்ரிக் பள்ளி, தர்மபுரி.

"உனக்கு ரஜினிகாந்த் திடீர்னு போன் பண்ணினா என்ன பண்ணுவே?"


"ரொம்ப சந்தோஷப்படுவேன்."

"அவ்வளவுதானா? நானா யிருந்தா போனை எடுத்துப் பேசுவேன்."






பி.விக்னேஷ் கண்ணா,
ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.வி.எம்.பள்ளி, தர்மபுரி.




எஸ். சரண்ராஜ்,
ஏழாம் வகுப்பு,
ஸ்ரீ விஸ்வபாரதி மெட்ரிக் பள்ளி,
தர்மபுரி.

ஓவியக் கூடம்



எஸ். நந்தகுமார்,
ஐந்தாம் வகுப்பு,
தூய பவுல் மெட்ரிக் பள்ளி,
தர்மபுரி.

எஸ். திவ்யா பானு,
ஐந்தாம் வகுப்பு,
தூய பவுல் மெட்ரிக் பள்ளி, தர்மபுரி.






கே. ராஜலக்ஷ்மி,
முதல் வகுப்பு, தூய பவுல் மெட்ரிக்
பள்ளி, தர்மபுரி.

தர்மபுரி ஸ்பெஷல்

இரண்டு நண்பர்கள் இருந்தனர். அந்த இரண்டு பேருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. சரியான முட்டாள்கள்.

ஒருமுறை இரண்டு நண்பர்களும் வேறு ஊருக்குச் சென்றிருந்த போது அவர்களுக்கு வழி தெரியவில்லை. அங்கு ஒரு சிலையும், அதன் மேல் ஒரு காக்கையும் இருந்தது. அந்தச் சிலையை மனிதன் என்று நினைத்துக் கொண்டு, "இந்த ஊருக்கு எந்த வழியாகச் செல்ல வேண்டும்?" என்று கேட்டார்கள். பலமுறை கேட்டும் பதிலில்லை. அப்பொழுது

யாருக்குப் படிக்கத் தெரியும்?



அந்தச் சிலையின் மேலிருந்த காக்கை பறந்து சென்றது. அதற்கு அவர்கள் "பார்த்தாயா, எங்களுடைய கேள்விக்கு நீ பதில் சொல்லாததால் தான் உன்னுடைய தொப்பி பறந்து சென்று விட்டது" என்றார்கள்.

ஒரு நாள் இவ்விரண்டு நண்பர்களுக்கும் சண்டை ஏற்பட்டது. ஒருவன் "எனக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும்" என்றான். இன்னொருவன் தனக்குத்தான் 'நன்றாகத் தெரியும்' என்றான். "சரி, நமக்குள் ஒரு போட்டி வைத்துக் கொள்வோம். நம் ஊர் கோவிலில் எப்பொழுதும் ஒரு பலகையில் ஒரு வாக்கியம் எழுதி இருக்கும். நாம் நாளை அங்கு போவோம், யார் அந்தப் பலகையில் இருப்பதைச் சரியாகச் சொல்கிறோமோ, அவங்க தான் படிப்பாளி. தோற்றவர் ஜெயித்தவருக்கு விருந்து வைக்க வேண்டும்" என்றான் ஒருவன். மற்றவனும் ஒப்புக் கொண்டான். கொஞ்ச நேரத்தில் அதில் ஒருவன் அந்தக் கோயிலுக்குப் போய் பூசாரியிடம் "நாளைக்கு நீங்கள் பலகையில் என்ன வாக்கியம் எழுதப் போகிறீர்கள்?" என்று கேட்டான். "எல்லாம் நன்மைக்கே என்ற வாக்கியம்தான்" என்றார் பூசாரி. சிறிது நேரத்தில் இன்னொருவன் வந்து என்ன வாக்கியம் எழுத இருக்கிறது என்றும் அதற்குக் கீழ் என்ன எண் எழுதப்படும் என்பதையும் தெரிந்து கொண்டு போய்விட்டான்.

அடுத்த நாள் அதிகாலையில் இரண்டு பேரும் அங்கு வந்தனர். அதில் ஒருவன் "பலகையில் "எல்லாம் நன்மைக்கே என்று எழுதியிருக்கிறது" என்றான். இன்னொருவன் "இங்கிருந்து பார்த்தாலே அது கொட்டை எழுத்தில் தெரிகிறது. அதற்குக் கீழ் என்ன எழுதியிருக்கிறது என்று சொல்" என்றான். அதற்கு இன்னொருவன் திருதிருவென விழித்தான். கேட்டவன் அந்த எண்ணையும் கூறினான். இதில் இரண்டு பேருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது, யாருக்கு யார் விருந்து வைப்பது என்பதைப் பற்றி. அப்பொழுது அங்கு ஒருவர் வந்தார், "ஏன் சண்டையிடுகிறீர்கள்?" என்றார். அவர்கள் நடந்ததை எல்லாம் கூறினர். அதற்கு அவர் "நீங்கள் இரண்டு பேரும் எனக்குத் தான் விருந்து வைக்க வேண்டும், ஏனெனில் அங்கு இன்னும் வாக்கியமே மாற்றப்படவில்லை, நீங்கள் கொஞ்சம் சீக்கிரமாக வந்து விட்டீர்கள்" என்றார்!

- க. கிருபா ரோஃபி,
ஸ்ரீ விஸ்வபாரதி மெட்ரிகுலேஷன் பள்ளி, தர்மபுரி.

1000/- ரூபாய் பரிசு!



நீங்கள் அதிகம் விரும்பும் இப்போட்டியில் பங்கேற்பது மிகவும் சுலபம். நீங்கள் செய்ய வேண்டியது:

* சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுத வேண்டும்.
* பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும்.
* முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழுமுகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மொத்தப் பரிசு ரூ. 1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. 20.11.2003

இந்த மாதப் போட்டி

பொருத்துக:


1. நாலந்தா பல்கலைக்கழகம் - தன்வந்தரி
2. இந்திய மருத்துவ உலகின் தந்தை - ரவீந்திரநாத் தாகூர்
3. கபடி - கங்கா
4. சாந்தி நிகேதன் - மக்ஸிம்கார்க்கி
5. பீஷ்மரின் தாயார் - இந்தியா
6. தாய் - பீகார்
7. படபடக்கும், நீர் சுரக்கும், அக்கம் பக்கம் சுழலும், அடிக்கடி மூடித் திறக்கும் - அது என்ன?
8. மேலே உள்ள படத்தில் இருப்பது யார்?



ஆசிரியர்,
கோகுலம்
47,N.P. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97

திடீர் அரசன் அகட விகடன்!

கங்க நாட்டு மன்னன் கஜேந்திர பூபதி வீரர்கள் புடைசூழ நல்ல நாளில் வேட்டையாட காடு நோக்கிக் கிளம்பிச் சென்றான். காட்டிலே பல மிருகங்களை வேட்டையாடினான். மாலை நேரமாகியது. அந்த நேரத்திலே அவன் கண்ணில் தென்பட்டது ஒரு வேங்கைப் புலி.



அதைப் பார்த்ததும் வேகமாகக் குதிரையில் அமர்ந்தபடியே துரத்திச் சென்றான். வேங்கைப் புலி ஓடி மறைந்து விட்டது.

அப்போது அங்கு மரம் வெட்டிக் கொண்டிருந்த விறகு வெட்டி ஒருவன் அரசன் கண்ணில் தென்பட்டான். "விறகு வெட்டியே, உன் பெயர் என்ன?" என்றான் அரசன். "மன்னா, என் பெயர் அகட விகடன்" என்றான் விறகு வெட்டி.

"அப்படியா, நான் இதுவரை கேள்விப்படாத பெயராக உள்ளது. நல்ல பெயர்தான்" என்ற கஜேந்திர பூபதி, "ஆமாம், நீ இப்படி ஒவ்வொரு மரமாக வெட்டிச் சென்றால் காடே அழிந்து விடுமே. நீ வெட்டுகின்ற மரத்திற்குப் பதில் வேறு ஏதாவது செடி வைக்கிறாயா... அரசு அனுமதியின்றி மரம் வெட்டுவது குற்றம் தெரியுமா?" என்றான்.

"மன்னா, இது குற்றமா இல்லையா என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்கு எனது குடும்பம்தான்

என்.கோதண்டராமன்

முக்கியம். எனது கவலையைப் பற்றி உமக்கு என்ன தெரியும்? இந்த விறகைக் கொண்டு சென்று விற்றால்தான் எனக்கு ஒரு வேளையாவது சோறு சாப்பிட முடியும். ஆனால் உங்களுக்கு என்ன கவலை இருக்கப் போகிறது? மணி, அடித்தால் அறுசுவை உணவு. நன்கு உண்டு, உறங்கப் போகிறீர்கள்" என்றான் கிண்டலாக அகடவிகடன்.

"அகடவிகடா, நீ மட்டும் என்ன, விறகை அதிக விலைக்கு விற்று நிம்மதியாக உண்டு உறங்கப் போகிறாய்" என்றான் கஜேந்திர பூபதி.

யார் கவலை ஏதுமின்றி நிம்மதியாக வாழ்வது என்ற போட்டி மன்னனுக்கும் அகடவிகடனுக்கும் இடையே ஏற்பட்டது.

"அகடவிகடா, நான் சொல்வது போல் செய். இதோ எனது உடைகள் மற்றும் ஆயுதம். நீ என்னைப் போலவே உடை அணிந்து ராஜா வேடத்தில் எனது குதிரையில் அரண்மனைக்குச் சென்று விடு. நான் உனது குடிசைக்குச் செல்கிறேன். ஆனால் ஒரு வாரம் மட்டுமே இந்த ஆள் மாறாட்டம். அப்போது யார் நிம்மதியாக இருக்கிறார்கள் என்பதை இருவருமே தெரிந்து கொள்ளலாம்" என்றான். அகடவிகடனும் சரி என்று ஒப்புக் கொண்டான்.

அகடவிகடன் சென்ற பிறகுதான் கஜேந்திர பூபதி, 'ஐயோ விறகு வெட்டி குடிசை எங்கே? என்று கேட்காமல் போய் விட்டோமே!' என்று யோசனை செய்ய ஆரம்பித்தான். நேரமும் ஓடியது. தூரத்தில் கஞ்சிக் கலயம் சுமந்தபடி பெண் ஒருத்தி வருவதைப் பார்த்தான். 'அடடா, இவள்தான் விறகு வெட்டியின் மனைவியோ? இவளை எப்படி சமாளிப்பது?' என யோசனை செய்தான்.

அகடவிகடன் மனைவியும் 'நம் கணவர் விறகு வெட்டும் இடத்தில் யார் இவர் புது ஆள்?' என்று யோசித்தபடியே வந்தாள். "ஐயா யார் நீங்கள்? என் கணவரின்




கோடரியை வைத்திருக்கிறீர்கள்? அவர் எங்கே சென்றார்?"என்றாள்

"அம்மா, நான் உன் கணவரோட நண்பன்தாம்மா. அவன் அவசரமாகப் பக்கத்து ஊருக்குப் போயிருக்கான். வர ஒரு வாரம் ஆகும். அதுவரை என்னை உங்களுக்கு உதவியா இருக்கச் சொல்லியிருக்கான்" என்றான்.

"நீங்க எப்படி எனக்கு உதவியா இருக்க முடியும்? அவர் இருந்தா இந்நேரம் நாலு செம விறகு வெட்டியிருப்பார். பார்த்தா இரண்டு செம விறகுதான் இருக்கு. இது கூட அவர்தான் வெட்டியிருப்பாரென்று நினைக்கிறேன். உங்களைப் பார்த்தா நீங்க இந்தத் தொழிலுக்கே புதுசுன்னு தெரியுது. அதனால ஒரு வாரத்துக்கு நானே வந்து விறகு வெட்டறேன். நீங்க துணைக்கு வாங்க! இரண்டு பேருமா சேர்ந்து

திமிங்கிலம், டால்ஃபின் குட்டிகள் பிறக்கும்போது முதலில் அதன் வால் பகுதிதான் வெளியே வரும். இதர பாலூட்டிகளைப் போல தலைப்பகுதி யல்ல. குட்டிகள் நீருக்குள் வெளிப் பட்டதும் தாய் அதை நீர் மட்டத்துக்கு மேல் தள்ளிக் கொண்டு வந்து சுவாசிக் கச் செய்கிறது. நீலத் திமிங்கிலம் குட்டி பிறக்கும்போதே ஏழரை மீட்டர் நீளமும் இரண்டு டன் எடையும் இருக்கும். ஒரே வாரத்தில் அதன் எடை இரு மடங்காகி விடும்.

– என். ஜரீனாபானு



விறகைத் தூக்கிச் செல்லலாம். இப்ப உட்கார்ந்து இந்தக் கூழைக் குடிங்க. இந்தாங்க இந்தப் பச்சை மிளகாயைக் கடிச்சிக்குங்க" என்றாள் அகடவிகடனின் மனைவி.

கூழ் என்றால் அரண்மனை உணவு மாதிரி இருக்கும் என நினைத்து கையை நீட்டியவர், கையில் பிசுபிசு என ஒட்டும் கூழைப் பார்த்ததும் பயந்து போனான். அவன் இதுவரை பார்த்தே அறியாதது.

அரண்மனைக்குச் சென்று இறங்கிய விறகு வெட்டி அகடவிகடனை அரசர் வந்து விட்டார் என அரசிக்குத் தகவல் கொடுக்க அரசி அகடவிகடனை உள்ளே அழைத்துச் சென்று விட்டாள். மூன்றே நாளில் அகடவிகடனுக்கு அரச உணவு வெறுத்து விட்டது. அரச சபைக்கும் செல்லவில்லை. அமைச்சரைக் கூடச் சந்திக்க மறுத்தான். அரசனது போக்கைக் கண்டு அமைச்சர் குழம்பினார். அகடவிகடன் தனது மனைவி மக்களை எண்ணி ஏங்க ஆரம்பித்தான். தன் சுதந்திரம் பறிபோய் விட்டது போல் நினைத்தான். எப்போது தன் குட்டு வெளிப்பட்டுவிடுமோ என எண்ணி பயந்தான்.

கஜேந்திர பூபதிக்கும் வாழ்க்கை வெறுத்து விட்டது. 'அவசரப்பட்டு விட்டோமோ, நாட்டில் என்னென்ன பிரச்னையோ, அமைச்சர் எப்படி தவிக்கிறாரோ, நாம் இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கலாமே. அகடவிகடன் படிப்பறிவில்லாதவன். அவனால் என்ன செய்ய முடியும்?' என யோசனை செய்தான் மன்னன்.

அகடவிகடனின் மனைவியை அழைத்தான். தான் யார் என்ற உண்மையைக் கூறி விட்டான். அகடவிகடனுக்குத் தெரியாமல் அமைச்சரைச் சந்தித்து தகவலறிந்து வரச் சொன்னான்.

அகடவிகடன் மனைவி அமைச்சரைச் சந்தித்து விவரத்தைக் கூறினாள்.

'அட முட்டாள் மன்னா! அவன்தான் படிப்பறிவில்லாதவன். ஏதோ வாயில்



வந்ததை உளறினான். உனக்கு எங்கே புத்தி போயிற்று?' என நினைத்தவர், "அரசன் அங்கேயே இருக்கட்டும். இன்னும் இரண்டு மூன்று நாளில் இதற்கு வழி செய்கிறேன் எனச் சொல்" என்று பதில் கூறி அனுப்பினார்.

அரசனுடைய அறைக்குச் சென்ற அமைச்சர் அகடவிகடனிடம் தனக்கு எல்லா உண்மையும் தெரியும் என்றார். அகடவிகடன் அமைச்சர் காலில் விழுந்தான். தன்னை மன்னித்துக் காப்பாற்றும்படி வேண்டினான். மனைவி மக்களைப் பார்க்க வேண்டும் என அழுதான். அவனைச் சமாதானம் செய்தார் அமைச்சர்.

நல்ல நாளில் அகடவிகடனை மீண்டும் வேட்டைக்குக் காட்டிற்கு அனுப்பினார். கஜேந்திர பூபதியும் அகடவிகடனும் ரகசியமாகச் சந்தித்தனர். அகடவிகடன் கஜேந்திர பூபதியின் காலில் விழுந்தான். "மன்னா, உமது தகுதிக்கு ஏற்ற கஷ்டம் உமக்கும், எனது தகுதிக்கு ஏற்ற கஷ்டம் எனக்கும் உள்ளது என்பதைப் புரிந்து கொண்டேன். என் கஷ்டத்துக்கு நான்தான் தீர்வு தேட முடியும். உமது பிரச்னைக்கு நீர்தான் தீர்வு காண முடியும். விறகு வெட்டி நான் ஒரு நாளும் ராஜாவாக முடியாது. ராஜாவான நீங்களும் ஒருநாளும் விறகு வெட்டியாக முடியாது. அதனால் அவரவர் கஷ்டம் அவரவருக்கு, இதுதான் உலக நியதி. அதை வெல்லத்தான் நாம் முயற்சி செய்ய வேண்டுமேயன்றி, கஷ்டத்தையோ தோல்வியையோ கண்டு துவளக் கூடாது என்று புரிந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றான் அகடவிகடன்.

மன்னன் கஜேந்திர பூபதியும், "நீ சொல்வது அனைத்தும் உண்மை என நான் புரிந்து கொண்டேன். எனக்கும் புத்தி வந்தது" எனக் கூறி அகடவிகடனுக்குப் பொற்காசுகளை வாரி வழங்கி, சந்தோஷமாகத் தன் நாடு போய்ச் சேர்ந்தான்.



நீண்ட துயில் கொள்ளும் கோலா!

'கோலா கரடி' என்று நாம் அழைத்தாலும் கோலா கரடி வகையைச் சேர்ந்த பிராணி அல்ல. கங்காரு, உம்பட் போன்ற பிராணிகளின் உறவுதான் இந்தக் கோலா. பார்ப்பதற்கு டெடி பியர் போன்று காட்சி தருவதால் இதைக் கோலா கரடி என அழைக்கின்றோம். இதன் அறிவியல் பெயர் Phasclarctos Cinereus. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தது.

கங்காருவைப் போலவே கோலாவும் வயிற்றில் பையுடைய விலங்கு. வெப்ப ரத்தப் பிராணி. மிகவும் கூர்மையான பற்களும், நகங்களும் கோலாக்களுக்கு உண்டு. உடலின் அடிப்பாகம் வெள்ளையாகவும், மேற்புறம் சாம்பல் நிறத்திலும் காணப்படும். உடல் முழுவதும் ரோமத்தால் மூடப்பட்டு இருக்கும். கழுத்துப் பகுதியிலும் தோள் பகுதியிலும் அதிகமான ரோமங்கள் இருப்பதால் இது மிக மோசமான வானிலையைக் கூடச் சமாளித்து விடுகிறது. பெரிய காதுகளும் பெரிய மூக்குமாகக் கோலா காணப்படுகிறது.

பெண் கோலா ஆண்டுக்கு ஒருமுறை ஒரே ஒரு குட்டியைப் பெற்றெடுக்கும். குட்டி பிறக்கும் போது 2 செ.மீ. நீளமே இருக்கும்! குட்டி பிறந்தவுடன் தாயின் வயிற்றில் உள்ள பைக்குள் சென்று பால் குடிக்கும். 5 மாதம் வரை பைக்குள்ளேயே வளரும். பாலும் யூகலிப்டஸ் இலையுமே உணவு. அதற்குப் பின் 8 மாதங்கள் வரை அவ்வப்போது வெளியில் செல்வதும், பைக்குள் வருவதுமாக இருக்கும். பின்னர் தனியாக வசிக்க ஆரம்பிக்கும்.





கோலா ஒரு தூங்கு மூஞ்சி. ஒருநாளைக்குப் பத்தொன்பது மணி நேரம் தூங்குவதற்கே செலவிடும். யூகலிப்டஸ் மரத்திலேயே வசிக்கும். யூகலிப்டஸ் இலைகள்தான் இவற்றின் உணவு. ஒருநாளைக்கு அரை கிலோ முதல் ஒரு கிலோ யூகலிப்டஸ் இலைகளைச்







சாப்பிடும். யூகலிப்டஸ் இலைகளில் இருந்து கிடைக்கக் கூடிய சக்தி மிகவும் குறைவு. எனவேதான் இவை பெரும்பான்மையான பொழுது தூங்கிக் கொண்டே இருக்கின்றன. இலைகளில் உள்ள தண்ணீர்ச் சத்தே இவற்றுக்குப் போதுமாதலால் தண்ணீரைப் பெரும்பாலும் பருகுவதில்லை.

பத்து கிலோ எடையுடைய மிகப் பெரிய கோலா விக்டோரியா நகரில் கண்டுபிடிக்கப்பட்டது. 5.5 கிலோ எடையுடைய மிகச் சிறிய கோலா வடக்கு க்வின்ஸ்லாந்தில் கண்டறியப்பட்டது.

கோலாக்களின் ஆயுட்காலம் 15 முதல் 20 வருடங்கள்.

கழுகு, ஆந்தை போன்ற பறவைகள் கோலாவின் எதிரிகள். கோலாவின் குட்டிகளை இப் பறவைகள் தூக்கிச் சென்று விடுகின்றன. கோலாவின் மிக முக்கியமான எதிரி மனிதன்தான். கோலாவின் ரோமத்துக்காக அதிக அளவில் மனிதன் வேட்டையாடி வருகிறான். எனவே மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே கோலாக்கள் காணப்படுகின்றன.

இது தவிர காடுகளை அழிப்பதும், சாலைகளில் அடிபடுவதும் கோலாக்களின் எண்ணிக்கை குறைய காரணங்கள்.

ஒரு மரத்தில் ஒரே ஒரு கோலா மட்டுமே வசிக்கும். ஆணும் பெண்ணும் குடும்பம் நடத்தும் போது மட்டுமே ஒன்றாகத் தென்படும்.

கோலா அழகாக மரம் ஏறும். குட்டியை முதுகில் சுமந்து கொண்டு ஏறும் பொழுது கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.! மரம் ஏறும் வகையில் பாதங்களும் நகங்களும் அமைந்துள்ளன.


கோலாவின் நுகர்வுத் திறன் அற்புதமானது. நுகர்ந்தே யூகலிப்டஸ் மரங்களின் வகைகளைக் கண்டறிந்து விடும். இவற்றால் முயலை விட வேகமாக ஓடவும் முடியும்.

எஸ்.சுஜாதா

வரலாற்றில் சில அதிசயங்கள்!



* அமெரிக்காவில் 1882 முதல் 14 வருட காலம் செயின்ட் லூயி, மாவட்ட நீதிபதியாக இருந்தார். இவர் கோர்ட்டுக்குப் புறப்படும்போது தமது கண்களை ஒரு துணியினால் கட்டிக் கொண்டு விடுவார். வழக்கு விசாரணை முடிந்து வீடு திரும்பியதுமே கட்டை அவிழ்ப்பார். பார்வையிட வேண்டிய தஸ்தாவேஜுகளை ஒரு குமாஸ்தா படித்துக் காட்டுவார். வீட்டில் இருந்து கோர்ட்டுக்கு ஒரு வேலைக்காரனை அழைத்துப் போவார். பதவி வகித்த காலம் முழுவதும் அவர் இவ்வாறே விசாரணை நடத்தி தீர்ப்பளித்து வந்தார்.



* பராகுவே நாடு 1932 இல் வெளியிட்ட தபால் தலை ஒரு போருக்கே வழி வகுத்து விட்டது. அதில் அச்சிடப்பட்டிருந்த தேசப்படத்தில் சாகோ பிரதேசம் சேர்க்கப்பட்டிருந்ததுதான் இதற்குக் காரணம். அண்டை நாடான பொலிவியாவும் இதற்கு உரிமை பாராட்டியது. இதனால் ஆத்திரமடைந்தே பொலிவியா, பாராகுவே மீது படையெடுத்தது. போர் மூன்றாண்டுகள் நீடித்தது. ஒரு லட்சம் பேர் உயிர் துறந்தனர். 1939ல்தான் இரு நாடுகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. சர்ச்சைக்கு உள்ளான பிரதேசத்தின் பெரும்பகுதி பராகுவேவுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது.

* ஃபிரான்சை ஆண்ட பிலிப் அகஸ்டஸ் என்ற மன்னன், ஒவ்வொருவரும் அவரவர் அந்தஸ்துக்கும் தகுதிக்கும் ஏற்பவே நீளமான செருப்பை அணிய வேண்டும் என்று கட்டளை பிறப்பித் திருந்தான். செருப்பின் நுனி ஆறு அங்குலத்திலிருந்து 12 அங்குலம் வரை இருக்கலாம். அதிக நீளமான நுனியுடைய 'ஷு'வை





அணிபவர் சமூகத்தில் அதிக அந்தஸ்து உடையவர் என்பது அர்த்தம். அந்த மன்னனது செருப்பு மட்டும் பட்டுக் குஞ்சங்களால் பின்னப்பட்டு 15 அங்குல நுனியைக் கொண்டதாக இருந்தது. அனைவரிலும் மிக அந்தஸ்து மிக்கவன் மன்னன்தானே!

* பர்மாவைக் கடைசியாக ஆண்ட துய்பா என்ற மன்னன் ஒரு பிச்சைக்காரனால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட ஒரு வேட்டை நாயைப் படை வீரனாக நியமித்தான். அது இறந்த பிறகு அரசு சடங்குகளைச் செய்து அதற்கு ஒரு கோபுரம் வேறு கட்டினான் என்றால் அதிசயமாக இல்லை!


* பண்டைய ரோமானியச் சக்கரவர்த்தியான அகஸ்டஸ் ஆக்டாவியானஸ் என்பவர், சிறுவர்களின் கோலி விளையாட்டையே தனக்குப் பிடித்த பொழுதுபோக்கு விளையாட்டாகக் கொண்டிருந்ததோடு, அதில் திறமை மிக்கவராகவும் திகழ்ந்தார். அந்த மாமன்னரை இந்த விளையாட்டில் ஜெயிப்பவர் அரண்மனையில் நடைபெறும் அடுத்த விருந்து




வைபவத்தில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார்.

* மாவீரர் அலெக்சாந்தர் குதிரையின் பெயர் 'பிகிப்பாலா'. கி.மு. 326ல் ஜீலம் நதிக்கரையில் நடைபெற்ற போரில் இக் குதிரை மரணமடைந்தது. இக் குதிரையின் நினைவாக அங்கு 'பிகிப்பாலஸ்' என்ற நகரை அலெக்சாந்தர் நிறுவினார்.

— என். ஜரினா பானு
திருப்பட்டினம்





ஒரு தாயக் கட்டையையும் ஆளுக்கொரு வண்ண பட்டன் களையும் எடுத்துக் கொண்டு தாயம் போட்டு ஆரம்பியுங்கள். 29-ஐ யார் முதலில் அடைகிறாரோ அவரே வெற்றி பெற்றவர். விளை யாடுங்கள், தீபாவளியைக் கொண்டாடுங்கள்!


ஆரம்பம்
28
29
தாயம்
போட்டு
வெற்றியடை
யவும்.
1
2
3
அணுகுண்டு
- ஓர் ஆட்டம்
இல்லை
4
5
ஆஹா!
ஸ்வீட்ஸ் -
8க்குச்
செல்லவும்
6
தீபாவளி!
7
8
9
10
11
ஊதுபத்தி
மறந்து
விட்டீர்கள்.
1க்குச் செல்
லவும்.



மழைக் காலத்தில் நோய்கள் அதிகம் வருவது ஏன்?

● வே. சுபஸ்ரீ, நல்லூர்.

? என் தங்கைக்கு இளநரை உள்ளது. இதற்குக் காரணம் என்ன? இதனை எப்படி தடுப்பது?

! இளநரை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது இரும்புச்சத்து, புரதச்சத்து போன்ற ஊட்டச்சத்துக் குறைபாடு. ரத்தச் சோகை, தைராய்டு கோளாறு, மன அழுத்தம் போன்ற நோய்களின் பாதிப்பாலும் இளநரை ஏற்படும். தரம் குறைந்த சோப்பு மற்றும் ஷாம்புகளை உபயோகித்தாலும் இளநரை வரலாம். பரம்பரை காரணமாகவும் இவ்வாறு ஏற்படுவது உண்டு. பரம்பரையால் உண்டாகும் இளநரையைத் தடுக்க வழியில்லை. பிற காரணங்களைத் தெரிந்து சிகிச்சை பெற்றால், இளநரை மறைய வாய்ப்புள்ளது. புரதச்சத்து நிறைந்த பால்,தயிர், பால்பொருள்கள், முட்டை, மீன், இறைச்சி, பருப்புவகைகள், வேர்க்கடலை போன்றவற்றையும், இரும்புச்சத்து மிகுந்த தானிய வகைகள், கீரைகள், பேரீச்சம்பழம், பாகல், அவரை, அன்னாசி, காலிஃப்ளவர் முள்ளங்கி, எரல், வெல்லம், முந்திரிப்பருப்பு போன்றவற்றையும் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் இளநரை வருவதைத் தடுக்கலாம்.

● இல. கதிர்வேலன்,
விழுப்புரம்.

? மழைக்காலம் வந்து விட்டாலே நோய்கள் பெருகி விடுகின்றனவே... என்ன காரணம் டாக்டர்? இவற்றைத் தடுப்பது எப்படி?

! மழைக்காலத்தில் தண்ணீர் மூலம் நோய்கள் பரவும் வாய்ப்பு அதிகரிப்பதால் அப்போது நோய்களும் அதிகரிக்கின்றன. வழக்கமாக, நோயுள்ள மனிதனின் சிறுநீர், மலம், சளி, எச்சில் போன்றவற்றின் வழியாக பாக்டீரியா கிருமிகள் வெளியேறி, நம் சுற்றுப்புறத்தில் உள்ள நீரில் சாக்கடையில் கலக்கின்றன. மழை பெய்யும் போது இந்த அசுத்தநீர் மழைத்தண்ணீரில் கலந்து குளம், குட்டை, ஏரி, கால்வாய், ஆறு போன்றவற்றை அடைந்து, அவற்றின் மூலம் பல இடங்களுக்குக் கிருமிகளைப் பரப்புகிறது. இந்த அசுத்த நீரைப் பொதுமக்கள் குடிநீராகப் பயன்படுத்தினால், அல்லது குடிநீரில் இந்த அசுத்தநீர் கலந்து விட்டால், கிருமிகள் மனிதனின் உணவுப்பாதையை அடைந்து நோய்களை உருவாக்குகின்றன.


டாக்டர் கு.கணேசன்

டைபாய்டு காய்ச்சல், மஞ்சள்காமாலை, வயிற்றுப் போக்கு, சீதபேதி, காலரா, குடல் புழுத்தொல்லை போன்றவை தண்ணீர் மூலம் பரவும் நோய்களில் முக்கியமானவை. இவை தவிர, வைரஸ் கிருமிகளும் மழைக் காலத்தில் அதிகரிப்பதுண்டு. இதன் விளைவால் தடுமம், ஃப்ளுக்காய்ச்சல், சென்னைக் கண்நோய் போன்றவையும் அதிகமாகப் பரவும். மழைக்கால நோய்களைத் தவிர்க்க, நன்றாகக் கொதிக்க வைத்து ஆற வைத்த தண்ணீரைக் குடிக்க வேண்டும். சாப்பிடும் முன்பும், மலம் கழித்த பின்பும் கைகளை சோப்பு கொண்டு நன்றாகக் கழுவவேண்டும். சாலையோரங்களில் விற்கப்படும் உணவுகளையும், ஈக்கள் மொய்க்கும் உணவுப்பண்டங்களையும் உண்ணக் கூடாது. தும்மல், இருமல் வந்தால் முகத்தைக் கைக்குட்டையால் மூடிக் கொள்ள வேண்டும். சுயசுத்தம் பேண வேண்டும். சுற்றுப்புறச் சுகாதாரம் காக்க வேண்டும். மழைக்காலத்தில் ஈக்களும் கொசுக்களும் அதிகமாகக் காணப்படுவதால் அவையும் நோய்களைப் பரப்ப உதவுகின்றன.

● தி.சே.அறிவழகன்,
திருப்புலிவனம்.

? உடலில் காயம்பட்ட இடத்தில் காப்பிப்பொடியை வைக்கலாமா டாக்டர்?

! காயம்பட்ட இடத்தில் காப்பிப்பொடி, மூக்குப் பொடி, செங்கல்பொடி, மண், திருநீறு, சாம்பல், சுண்ணாம்பு, பேனா மை போன்றவற்றைக் கண்டிப்பாக வைக்கக் கூடாது. அப்படி செய்தால் நோய்க் கிருமிகள் எளிதாக ரத்தத்தில் கலந்துவிடும். காயத்தில் சீழ் பிடிக்கும். அது ஆறுவதற்குத் தாமதம் ஆகும். காயத்திலிருந்து ரத்தம் வெளியேறாமல் தடுப்பதுதானே நம் நோக்கம். அதற்குக் காயம் ஏற்பட்டுள்ள இடத்தை உள்ளங்கையால் சில நிமிடங்களுக்கு அழுத்திப் பிடிக்க, ரத்தக் கசிவு நின்றுவிடும். சற்றுப் பெரிய காயமென்றால், துணியினால் இறுக்கமாகக் கட்டுப் போட வேண்டும். காயம் உள்ள உடல் பகுதியை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இன்னும் பெரிய காயமென்றால் மருத்துவரின் உதவியுடன் தையல் போட வேண்டும்.



புதிர் இங்கே! விடை கீழே!

1. மீனில் உள்ள நல்ல கொழுப்பு எது?
அ. கொலஸ்டிரால் ஆ. ஒமேகா-3
இ.ஒமேகா-6

2. நம் உடலைப் பாதுகாக்கும் அமினோ அமிலங்கள் மொத்தம் எத்தனை?
அ. 8 ஆ. 16 இ. 20.

3. உலக சுகாதார தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
அ. ஏப்ரல் - 7
ஆ. செப்டெம்பர் -5
இ. நவம்பர் - 14


4. எலும்புகளின் வளர்ச்சியைத் தூண்டும் இயக்குநீர் எது?
அ. தைராக்சின்
ஆ. கால்சியம்
இ. வளர்ச்சி இயக்குநீர்.

5. கண்புரைநோய் விழியில் எந்தப் பகுதியைப் பாதிக்கும்?
அ. விழியாடி
ஆ. விழித்திரை
இ. கருவிழி.


விடை இங்கே!
1.ஆ 2.இ 3.அ 4.இ 5.அ


இலங்கை உருவானது எப்படி?


வேணுவாரியத்












மஹாமேரு மலையை மட்டுமின்றி அருகிலுள்ள மலைகள் அனைத்தையும் சுற்றி வளைத்தது பாம்பு.
என்ன ஓர் ஆணவம்! நான் இதை அடக்குகிறேன்.
ஆனால் எவ்வளவு முயற்சித்தும் வாயு பகவானால் மஹாமேரு மலையைச் சிறிதும் நகர்த்த இயலவில்லை.
தன் சக்தி முழுவதையும் உபயோகித்தார் வாயு பகவான். கடவுள்கள் உட்பட அனைவரும் அதிர்ந்தனர்.


இதை உடனே தடுத்து நிறுத்தணும். நாம் விஷ்ணுவைச் சந்திக்கலாம்.
விஷ்ணுவிடம் விஷயத்தை விளக்கினர்.
கவலைப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்.
விஷ்ணு மஹாமேருவுக்குச் சென்றார்.



உங்கள் சண்டையை நிறுத்துங்கள்!
சரி, நான் ஒரு மலையை விடு விக்கிறேன்.
வாசுகி தன் பிடியிலிருந்து மஹாமேருவுக்கு அருகில் உள்ள திரிகூட மலையை விடுவித்தார்.
இதோ, என் வலிமையை நிரூபிக் கிறேன்.
திரிகூடமலை பறந்து சென்று இந்தியாவின் தென் கோடிக் கடலில் விழுந்தது.
கடலுக்கு வெளியே தெரியும் பகுதியில் விஸ்வகர்மா அழகான நகரத்தை உருவாக்கினார். இந்நகரத்தில்தான் ராவணன் பிறந்து, வளர்ந்து ஆட்சி செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

முள்ளம்பன்றி ஒரு பயங்கரமான மிருகமன்று. அதன் உடலில் உள்ள முட்கள் முதலில் வழுவழுவென்று பட்டு போல் இருக்கும். பிறகு சிறிது நாளில் செங்குத்தாக முள் போல் நிற்கும். முள் அந்த மிருகத்தின் உடலில் குத்திக் கொண்டிருக்காது. எனவே அது எதிரியுடன் போராடும்போது முட்கள் கீழே விழும்.



முள்ளம் பன்றிக்கு உப்பின் மேல் பிரியம். மனிதர்கள் கூடாரம் போட்டிருந்தால், அங்கு வியர்வைக் கையால் தொட்ட பண்டம் இருந்தால் கூட அதை வாயில் போட்டுக் கொள்ளும்.

- என். ஜரினா பானு,
திருபட்டினம்


பனித்துளிகள் உருவாகக் காற்றில் உஷ்ண நிலை மிகவும் குறைவாக இருக்க வேண்டும். குளிர் காலங்களில் இரவில் பூமி மட்டத்திலுள்ள காற்றின் உஷ்ண நிலை குறைகிறது. அவ்வாறு குறையும் போது காற்றில் உள்ள நீராவி நிறைச் செறிவு அடைகிறது.



இதனால் காற்றில் கலந்துள்ள அதிக அளவு நீராவி குளிர்ச்சியடைந்து மரம், செடி, கொடிகளின் மேல் நீர்த் திவலைகளாகப் படிந்து விடுகிறது. இதனைத்தான் பனித்துளி என்கிறோம்.

- எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி.

உலகிலேயே மிகச் சிறிய ராணுவம் 'அண்டோரா' என்ற நாட்டைச் சேர்ந்தது தான். இங்கு ராணுவத்தில் 1 அதிகாரி, 6 சிப்பாய்கள், 4 பொது ஊழியர்கள் மட்டுமே உள்ளனர்.




மேலும் இயந்திர துப்பாக்கி, பீரங்கி போன்ற பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் எதுவுமே அவர்களிடம் கிடையாது.

- எம். வினோத்,
சங்கரன்கோவில்

கொக்குகளைப்

* மூங்கில் மரம் இருபத்து நான்கு மணி நேரத்தில் ஒரு மீட்டர் உயரம் வளர்கிறது.
* வெங்காயம் நறுக்கும் போது வெளிப்படும் அமிலம் 'ப்ரோப்பின் சல்பானிக்'.
* சென்னையில் முதல் முதலாகப் பிரசுரிக்கப்பட்ட ஆங்கில தினசரி 'இந்தியன் குரியர்'. 1785, அக்டோபர்,1ம் தேதி பிரசுரமானது.

- தேனி முருகேசன்



நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.
நண்டுக்குத் தலை இல்லை.
ஆமைக்குப் பல் இல்லை.
வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை.



மீனிற்கு இமை இல்லை.
மண்ணுளி பாம்புக்குக் கண் கிடையாது.
பாம்பிற்குக் காது இல்லை.

— கி. மஞ்சுளா,
தூத்துக்குடி

எனவே மழைக்காலத்தில் இது தரைக்கு மேலே வருகிறது.

- நுஷரத்,
ஏழாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்.


பழங்காலத்தில் வங்கிகள் இல்லை. திருடர்கள் பயமோ அதிகம். ஆகவே அக்காலத்தில் தாங்கள் சேமிக்கின்ற செல்வத்தைத் திருடர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக வீட்டுக்குள்ளேயே எங்கேயாவது குழி தோண்டிப் புதைத்து வைப்பது வழக்கம். அப்படி புதைத்து வைத்த செல்வம் தான் புதையல்!



- கு. அருணாசலம்
தென்காசி


பிடிக்கும் மீன்!

மண்புழு உலகெங்கும் காணப்படுகிறது. இதில் ஆயிரக்கணக்கான இனங்கள் உண்டு. இவற்றுள் சில மூன்று செ.மீ. நீளமிருக்கும்.




சில மண்புழு மூன்று மீட்டர் வரை கூட இருக்கும். இதனைப் பாம்பு என்று நினைத்து மக்கள் மிரளுவது உண்டு. இதன் உடல் முழுவதையும் ஒளி புகக் கூடிய மெல்லிய தோல் மூடியிருக்கும். இதன் வழியாகத்தான் மண்புழு மூச்சு விடும். இவ்வாறு மூச்சுவிடுவதற்குத் தோல் ஈரமாக இருக்க வேண்டும். ஆனால் நீருக்குள்ளும் சுவாசிக்க முடியாது.

மீன்களைக் கொக்குகள் பிடித்துத் தின்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் கொக்குகளைப் பிடித்துத் தின்னும் மீன்களைப் பற்றித் தெரியுமா? தண்ணீர் மட்டத்தை ஒட்டித் தாழ்வாகப்



பறந்துவரும் கொக்கை வெடுக்கென தண்ணீருக்குள் பிடித்து இழுத்து சாப்பிடும் மீனும் உள்ளது. இந்த மீனின் பெயர் 'பிரான்யா'. இவ்வகை மீன்களைக் கரீபியன் தீவிலிருந்து வட அர்ஜென்டினா வரை காணலாம்.

- குட்டிபிரசன்னா,
கரூர்



உள்ளது.

உலகிலேயே மிக உயரமான இடத்தில் 'டெலிபோன் பூத்' அமைத்த பெருமையும் நம் இந்திய இராணுவத்தைத்தான் சாரும். 1997ஆம் ஆண்டு நவம்பரில் இந்த பூத் செய்சன் பனி மலையில் அமைக்கப்பட்டது.

- ஆர்.ஆர்.பூபதி,
கன்னிவாடி

நாம் தலைவலி போன்ற பிணிகளுக்கு உபயோகிக்கும் தைலம் யூகலிப்டஸ் மரத்தி



லிருந்து தயாரிக்கப்படுகிறது. இது இலையுதிரா மரத்தின் வகையைச் சார்ந்தது. இந்த மரத்தில் பல வகைகள் உண்டு. அவை எல்லாம் மருத்துவப் பலன் உள்ளவையாக இல்லை. பல வகை மரங்கள் அடுப்பு எரிக்கும் விறகாக மட்டுமே பயன்படுகிறது. யூக்கலிப்டஸ் குலேடிலஸ் என்ற மரவகை தான் மருத்துவப் பயன் மிக்கவையாக உள்ளது. நமது நாட்டில் இந்த மரம் முதன் முதலில் நீலகிரியில் மட்டுமே பயிரிடப்பட்டு வந்தது. இப்போது வனத்துறையினர் தமிழ் நாடெங்கும் பரவலாக பயிரிடுகின்றனர்.

- கி. செந்தில் குமார்,
பதினோராம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, நல்லூர்

உலகிலேயே மிக உயரமான இடத்தில் விமான தளத்தை அமைத்தவர்கள் நம் இந்திய இராணுவப் பொறியாளர்கள் தான். இது லடாக் பகுதியில் 'தோனி' என்னும் இடத்தில் உள்ளது.

உலகின் உயரமான இடத்தில் சாலை அமைத்ததும் நம் இந்திய ராணுவப் பொறியாளர்கள் தான். இது கர்டாங்லா என்னுமிடத்தில் இமய மலைப் பகுதியில்


உலகத்தை மூன்று முறை சுற்றிவர எவ்வளவு தூரம் பறக்க வேண்டுமோ, அவ்வளவு தூரம் பறந்தால் தான் ஒரு தேனீ ஒரு பவுண்ட் தேனைச் சேகரிக்க இயலும். இத்தேனைச் சேகரிக்க ஒரு தேனீ பூவுக்கும், தன் கூட்டிற்கும் இடையே இருபதாயிரம் முறை பறக்க வேண்டியிருக்கிறது. ஒரு பவுண்ட் சுத்தமான தேனை உண்டாக்க ஒரு தேனீக்கு ஒரு லட்சத்து இருபதாயிரம் மணி நேரம் பிடிக்கும்.

தேனைச் சேகரிக்கும் தேனீக்கள் ஐந்து அல்லது ஆறு வாரங்கள் தான் உயிரோடிருக்கும். இதற்குக் காரணம், தேன் சேகரிக்க பறந்து, பறந்து அதன் சிறகுகள் தேய்ந்து போய்



விடுவதுதான். தேனீயின் அயராத உழைப்பின் காரணமாக நாம் நல்ல மருத்துவ குணமுள்ள தேனைப் பெறுகிறோம்.

- வி. கமலக்கண்ணி,
ஈரோடு



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



துரோகி யார்?

2. கொடைக்கானல் சுற்றுலா!

பள்ளி நிர்வாகம் தெளிவாக அறிவித்திருந்தது. கொடைக்கானல் சுற்றுலாவுக்குச் செல்லும் எல்லா மாணவர்களும் பள்ளிக்கு வந்துவிட வேண்டும். அங்கிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இரண்டு பேருந்துகளில் ஏறி, சென்னை எழும்பூர் ரயில்வே நிலையத்துக்குச் செல்ல வேண்டும்.

பாண்டுஸ் குழுவில் முதலில் பள்ளிக்கு வந்து சேர்ந்தது ராஜுதான். தோளில் ஒரு பையும், கையில் ஒரு சூட்கேஸுமாக வந்திருந்தான். சுமக்க கனமாகத்தான் இருந்தது. கைமுறுக்கு, மில்க் ஸ்வீட், மிக்ஸர் என்று அம்மா எதையெதையோ திணித்திருந்தாள். 'இதையெல்லாம் எடுத்துட்டு வரணும்னு ஸ்கூல்ல சொல்லல. அவங்களே வேண்டியதைக் கொடுப்பாங்க' என்று ராஜு சொல்லிப் பார்த்தான். ஆனால் அம்மா 'கொண்டு வராதேன்னும் சொல்லலியே' என்று மடக்கினாள்.

பாண்டுஸ் பிக்னிக்கிலும் சேர்ந்தே இருப்பார்கள் என்பது அம்மாவுக்குத் தெரியும். "உங்க அஞ்சு பேருக்கும் தனித்தனி கவரிலே இந்தத் தின்பண்டங்களை பேக் செஞ்சுடறேன்" என்று அவர் கூறியபோது அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தான் ராஜு. "அப்படிப் பிரிச்சுப் பேசாதேம்மா. நாங்க சேர்ந்துதான் ஷேர் செய்துக்குவோம்" என்றான்.

கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்கள் வந்து சேர்ந்து கொண்டிருந்தனர். 'எங்கடா உன் செட்ல மீதி நாலு பேரும் வந்து சேரலையா?' என்று அமுதா மிஸ் கேட்டுவிட்டுப் போனார். 'வந்துடுவாங்க மிஸ்' என்று பதிலளித்தபோதே, அந்தக் கேள்வி அவன் மனதில் எழுந்தது.

அருண் சரண்யா

'அந்த நாலுபேரில் யார் துரோகி?' இப்படி நினைப்பதே வருத்தத்தைத் தந்தது.

தொலைவில் சரவணபெருமாள் வந்து கொண்டிருந்தான். ரொம்ப உற்சாகமாக நடை போட்டு வந்தான். அருகில் வந்தவுடன் பட்டென்று ராஜுவின் முதுகைத் தட்டினான். "என்னடா, வகுப்புக்குன்னா லேட்டா வருவே, பிக்னிக்னா ஃபஸ்ட்டா?" என்றான்.

பின் சட்டென்று "என்னடா டல்லடிக்கிறே? அப்பா, அம்மாவை விட்டுட்டு மூணு நாள் இருக்கணுமேன்ற கவலையா?" என்றான்.

"என்னடா உளர்றே? நீங்க நாலு பேரும்

என் கூட இருக்கும்போது எதுக்காக நான் கவலைப்படணும்?" என்றான் ராஜு. சமாளிப்பு அல்ல, உண்மையும் அதுதானே!



"அப்போ வேறே எதுக்குக் கவலைப் பட்டுக்கிட்டிருக்கே?" என்று சரவணபெருமாள் விடாமல் கேட்க, அதற்குமேல் ராஜுவால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிய வில்லை. நடைபாதைப் பெரியவரைத் தான் பார்த்தபோது நடந்ததை அப்படியே கூறினான்.

கூறி முடித்ததும் சரவணபெருமாள் முகத்தில் ஒரு கலக்கம் ஏற்படும் என்று நினைத்தான். ஆனால் அவனோ கடகடவெனச் சிரித்தான்.

"என்னடா, நானென்ன ஜோக்கா அடிக் கிறேன். நீ இப்படி சிரிக்க?" என்றான் ராஜு.

"கோவிச்சுக்காதேடா. அந்தப் பெரியவர் சரியான ஏமாத்துப் பேர் வழியா இருக்கணும். உன்கிட்ட அவர் கேட்ட கேள்விகளைத் திரும்பவும் யோசிச்சுப்பாரு" என்றான்.

ராஜு யோசிச்சுப் பார்த்தான். அவர் "எட்டிலிருந்து பதினொண்ணுக்குள்ளே ஒரு நம்பரைச் சொல்லு" என்றார். அதற்கு அவன் "பத்து" என்றான்.

சரவணபெருமாள் விளக்கினான். "இப்படி கேட்டா யாரும் எட்டையோ பதினொண் ணையோ சொல்ல மாட்டாங்க. ரெண்டுக்கும் நடுவிலே இருக்கிறது ரெண்டே எண்கள்தான். அதிலே பத்து என்பதைத்தான் நிறையப்பேர் தேர்ந்தெடுக்க வாய்ப்பு உண்டு" என்றான்.

அந்தப் பெரியவர் கூறிய இரண்டாவது விஷயத்தை ராஜு நினைவில் கொண்டு வந்தான். "முல்லை, ரோஜா மாதிரி மணம் வீசுகிற வேறு ஒரு வெள்ளைப் பூவின் பெயரைச் சொல்லு" என்றதற்கு, "மல்லிகை"

என்று பதிலளித்திருந்தான் ராஜு. உடனே பெரியவர் தான் ஏற்கெனவே எழுதி வைத்திருந்த சீட்டைக் காண்பிக்க, அதில் "பத்து, மல்லிகை" என்றிருந்தது. அதாவது அவனது பதில்கள் இதுவாகத்தான் இருக்கும் என்று முன்னமேயே கணித்து எழுதி வைத்திருந்தார்!

இப்போது சரவணபெருமாள் தன் விளக்கத்தைத் தொடர்ந்தான்: "வெள்ளை கலரிலே இருக்கிற ஒரு பூவின் பெயரைச் சொல்லுன்னு யாரைக் கேட்டாலும் டக்கென்று மல்லிகை அல்லது முல்லையின் பெயரைத்தான் சொல்லுவாங்க. அவரே முல்லையின் பெயரைச் சொல்லிட்டதாலே, நீ மல்லிகையைத்தான் சொல்லுவேன்னு அவரால் சுலபமாக எதிர்பார்த்திருக்க முடியுமே. இனிமே இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் மனசைப் போட்டுக் குழப்பிக்காதே" என்றான்.

ராஜுவுக்கு ஒரு தெளிவு கிடைத்துவிட்டது போல் இருந்தது.

தூரத்தில் பிரகாஷ், அகிலா, ஆலிஸ் மூவரும் சேர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில் இரண்டு பேருந்துகளும் வந்து சேர்ந்தன. பாண்டுஸ் ஐவரும் ஒரே பேருந்தில் ஏறிக் கொண்டார்கள். பிற மாணவர்கள் பேருந்தின் முன் இருக்கைகளில் உட்கார்ந்து கொள்ள முண்டியடித்து ஓடினார்கள். அப்போதுதானே பேருந்தின் குலுக்கல் குறைவாக இருக்கும். ஆனால் பாண்டுஸ் ஐவரும் பேருந்தின் பின் இருக்கையில் உட்காரத்தான் விருப்பம் காட்டினார்கள். அங்கேதானே ஐந்து பேரும் அடுத்தடுத்து உட்கார்ந்து கொள்ள முடியும்!

ஆனால் எழும்பூர் ரயில் நிலையத்தில் பேருந்து நின்றபோது, மீண்டும் ராஜுவின் மனதில் சில கேள்விகள் எழுந்து தொலைத்தன. 'ஒன்பது' என்ற எண்ணை அந்தப் பெரியவர் எழுதி வைத்திருக்கலாமே. 'பத்து' என்ற எண்ணைத்தான் நான் நினைப்பேன் என்று அவருக்கு எப்படி தெரிந்தது? தவிர அந்தப் பெரியவரின் முகத்தில் தென்பட்ட இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு சக்தி, அவன் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. 'அவர் பொய்யர் அல்ல. அப்படியானால் தங்கள் கூட்டத்தில் உள்ள துரோகி யார்?'

கொடைக்கானல் ஏரி பார்ப்பதற்குப் பெரும் உல்லாசத்தை அளித்தது. "எவ்வளோ பெரிய ஏரி! டேய், இந்த ஏரி நட்சத்திர வடிவத்திலே இருக்காண்டா" என்றெல்லாம் கூறியபடி மாணவர்கள் மகிழ்ச்சியில் துள்ளினார்கள்.


"பசுமையான வனப்பகுதிக்கு நடுவே இருக்கும் இந்த ஏரி, மலைமகளின் கழுத்தில் சூட்டப்பட்டிருக்கும் நெக்லஸ்" என்று ஆலீஸ் கூற, "ஆஹா, பிரமாதம்! கவிக்குயில் சரோஜினி நாயுடு அவர்களே" என்று கிண்டலடித்தாள் அகிலா. அங்கிருந்த ஒரு கூழாங்கல்லை எடுத்து அவள் மீது வீசுவது போல் பொய்க்கோபம் காட்டினாள் ஆலிஸ்.

ஐவரும் ஒரு படகில் ஏறினார்கள். கொடைக்கானல் ஏரியைப் பார்த்துவிட்டுப் படகில் செல்லவில்லையென்றால் எப்படி? கரையில் நின்று கொண்டு ஆசிரியர்கள் "பார்த்துப் போங்க. நடு ஏரியிலே கோமாளித்தனம் செய்யாதீங்க" என்று மாணவர்களையும் ஓடக்காரர்களையும் எச்சரித்து அனுப்பிக் கொண்டிருந்தனர். அவர்கள் கவலை அவர்களுக்கு!

"எனக்கு இந்தப் படகுக்காரரைப் பார்த்ததும் ஒரு கதை ஞாபகத்துக்கு வருது. குகனைப் பற்றிய கதை" என்றான் ராஜு.

* கந்தகமும் ரப்பரும் சேர்ந்து பேனா செய்யப்படுகிறது. அதனால் பேனா தீயில் எரியும்.
* நாணயங்கள் நிக்கல் என்னும் உலோகத்தால் செய்யப்படுவதால் பளபளப்பாகத் துருப்பிடிக்காமல் உள்ளன.
* வரைபடத்தை முதன் முதலில் வெளியிட்டவர் ஆஸ்வில்.
* தீப்பெட்டியைக் கண்டுபிடித்தவர் லூண்ட் ஸ்டார்டம்.

— எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி



'சொல்லுடா' என்றார்கள் மற்ற நால்வரும்.

"ராமர், லட்சுமணர், சீதை ஆகியோர் வனவாசம் போறாங்க இல்லையா? அப்போ கங்கைக் கரையைக் கடப்பதற்காக குகனோட உதவியைக் கேட்கிறாரு லட்சுமணர். உடனே குகன் ராமரோட கால் தூசியின் மகிமை பற்றி எனக்குத் தெரியும். அந்தக் கால்தூசி பட்டதும் கல்லே பெண்ணாயிடுச்சே. அவர் ஏறினதும் என் படகும் பெண்ணாயிட்டா நான் அதற்கப்புறம் பிழைப்புக்கு என்ன செய்வேன்னு சொல்றாரு. லட்சுமணருக்கு என்ன செய்யறதுன்னு புரியலை. உடனே குகன் 'நான் ராமரோட பாதங்களைக் கங்கைத் தண்ணியாலே நல்லாக் கழுவிடறேன். எந்தத் தூசியும் இருக்காது. அப்போ ராமர் என் படகில் ஏறட்டும்'னாராம். அதாவது ராமருக்குப் பாத அபிஷேகம் பண்ணணும்னு திட்டமிட்டிருக்காரு. ராமரும் சிரிச்சுக்கிட்டே ஒத்துக்கிட்டாராம்."

"பெரிய ஆளுதான் குகன்" என்று வியந்தான் பிரகாஷ்.

"அது மட்டுமில்லடா. அக்கரையில ராமரை விட்டதும் லட்சுமணன் கொடுத்த கூலியைக் கூட வாங்கிக்க மாட்டேன்னுட்டாராம். 'நானும் ராமரும் ஒரே தொழிலைச் செய்யறவங்க'ன்னாராம்."

"அதெப்படி?" என்று கேட்டாள் அகிலா.

"குகன் தன் படகின் மூலமா ஜனங்களை அக்கரையில் சேர்த்தாரு. ராமர் கடவுளாச்சே. தன்னோட பக்தர்களைச் சம்சாரக் கடலிலேயிருந்து கரை சேர்க்கறவரு. அதனாலதான் அப்படி சொன்னாராம்."

எல்லாருக்கும் இந்தக் கதை ரொம்பப் பிடித்திருந்தது. படகோட்டியும் கூட இதை ரசித்துக் கேட்டார்.

"இன்னும் வேகமாப் போங்க, இன்னும் வேகமாப் போங்க" என்று ராஜுவும் பிரகாஷும் கூற, ஓடக்காரர் தன் முழுத் திறமையையும் துடுப்புகளில் செலுத்தினார்.

"மெதுவா, மெதுவா" என்று கத்தினாள் அகிலா. "ஒரு வேளை படகு கவிழ்ந்துட்டா என்ன ஆவது? எனக்கு நீச்சல் கூடத் தெரியாது" என்றாள்.

"எனக்கும் தெரியாது", "எனக்கும்தான்", "எனக்குக் கொஞ்சம் நீச்சல் தெரியும்" என்று முறையே ஆலிஸ், ராஜு, பிரகாஷ் ஆகியோர் கூறினர்.

"எனக்கு நல்லா நீச்சல் தெரியும்பா. நான் நீந்திக் கரை சேர்ந்திடுவேன்" என்றான்




சரவணபெருமாள்.

என்ன ஒரு சுயநலமான பதில்! சட்டென்று ராஜு சரவணபெருமாளை உற்றுப் பார்த்தான். இவனிடம் நடைபாதைப் பெரியவர் கூறியதைப் பகிர்ந்து கொண்டிருக்கக் கூடாதோ?

திடீரென்று படகு வேகமாக ஆடத் தொடங்கியது.

(தொடரும்)



அம்மா ரொம்பச் சிரத்தை யெடுத்து விதவிதமான பலகாரங்கள் செய்வார். உங்கள் பங்குக்கு நீங்களும் ஏதாவது செய்து அம்மாவின் சிரமத்தைக் குறைக்கலாமே! நீங்களே செய்தாலும் அம்மா அருகில் இருப்பது அவசியம்.

சாக்லேட் டிலைட்

என்னென்ன தேவை?

ஜீனி - [illegible] கப்
பால் பவுடர் - 2 கப்
வெண்ணெய் - ¼ கப்
தண்ணீர் - ¾ கப்
கோகோ - 5 முதல் 7 டீஸ்பூன்

எப்படி செய்வது?

பால்பவுடரையும் கோகோ பவுடரையும் ஒன்றாகச் சலித்துக் கொள்ளவும். முக்கால் கப் தண்ணீரில் ஜீனியைச் சேர்த்து அடுப்பில் வைத்து கரைய விடவும். பிறகு வெண்ணெய்யைச் சேர்க்கவும். வெண்ணெய் உருகியதும் அடுப்பிலிருந்து பாத்திரத்தைக் கீழே இறக்கவும். பால்பவுடர் மற்றும் கோகோ பவுடரைப் போட்டு நன்றாகக் கலக்கவும். ஒரு தட்டில் கொட்டி ஆறவிட்டு, வில்லைகளாகப் போடவும். சாக்லேட் டிலைட் ரெடி.

— ஆர். பூர்ணிமா,
ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.எஸ்.வி.எம். மேல்நிலைப் பள்ளி, சென்னை.

ஜாம் - வாழைப்பழ பிஸ்கட்

என்னென்ன தேவை?

மேரி பிஸ்கெட் - 2 முதல் 4
ஜாம் - 2 முதல் 3 டீஸ்பூன்
வாழைப்பழம் - 1 முதல் 2
செர்ரி - 2


எப்படி செய்வது?

* ஒரு தட்டில் பிஸ்கட்களைப் பரப்பி வைக்கவும்.
* பிஸ்கட்டின் ஒரு புறத்தில் ஜாமைத் தடவவும்.
* வாழைப் பழத்தை மசித்து இன்னொரு பிஸ்கட்டின் மேல் தடவவும்.
* இரண்டு பிஸ்கட்களையும் சேர்த்து அழுத்தவும்.
* செர்ரியை பிஸ்கட்டின் மேல் வைத்துப் பரிமாறவும்.

— பி. பிரதீபா,
எட்டாம் வகுப்பு,
இந்திரா ப்ரியதர்ஷிணி பெண்கள் மேல் நிலைப் பள்ளி, பெங்களூர்.

ஆஹா, சூப்பர் டேஸ்ட்!

குறுக்கெழுத்துப் புதிர்




இடமிருந்து வலம்:

1. போர்ட்ப்ளேர் இத்தீவின் தலைநகர் (5)
9. மரம் வெட்ட உதவும் (3)
11. இராமனின் புத்திரர்களில் ஒருவன் (3)

வலமிருந்து இடம்:

4. மலர்களை நாடிச் செல்வது (3)
6. தாயம் விளையாட உதவும் (3)



14. சைக்கிள் (5)

மேலிருந்து கீழ்:

1. பாலையும் நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டுமே பருகும் என்று வழக்கில் கூறுவார்கள் (4)
2. நீரிலும், நிலத்திலும் வாழும் (3)
3. திரைகடலோடியும் திரவியம் ______ (2)
7. பாம்புக்குப் பகைவன் (2)
9. கண்ணகியின் கணவன் (4)
10. உணவுகளைப் பரிமாற இது அவசியம் (4)

கீழிருந்து மேல்:

5. ________வீட்டு கட்டுத் தறியும் கவி பாடும் (4)
6. விரோதி (4)
8. பறவைகளில் ஒன்று (2)
12. தேனீ சேமிப்பது (2)
13. காடு என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)
15. காரச் சுவைக்குக் காரணமானது (4)

— ஞா. மாடசாமி,
கீழ்ப்பாக்கம், சென்னை

விடை: 74ஆம் பக்கம்

நானும் ஜிம்மியும் பேசிக்கிட்டு இருந்த போது முத்துசாமியும் தாடிக்காரரும் வந்து கொண்டிருந்தனர்.

எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லேருந்து என்னை வளர்த்தவரு முத்துசாமிதான். அவருதான் எனக்கு ஆடறது, ஓடறது, குதிக்கறது, சீட்டியடிக்கறது, விளையாடறது, தவழறதுன்னு பல வித்தைகளைச் சொல்லிக் கொடுத்தாரு. தெருத் தெருவா... ஊர்...ஊரா என்னை அழைச்சுக்கிட்டுப் போனாரு. அவரு சொல்றபடி நான் செஞ்ச வித்தைகளைப் பார்த்து, ஜனங்க சந்தோஷப்பட்டு காசு போட்டாங்க. நாங்க ரெண்டு பேரும் வயிறு ரொம்ப சாப்பிட்டுக்கிட்டு நிம்மதியா இருந்தோம். அந்தத் தாடிவாலா என் எஜமானரைப் பாக்கறவரை...

நானும் என்னோட எஜமானரும் பாழடைஞ்ச திண்ணையிலே படுத்துக்கிட்டிருந்தோம். அப்பத்தான் ஒரு ஆளு - தாடி வெச்சுகிட்டு வந்தது நிலா வெளிச்சத்திலே பளிச்சின்னு கண்ணிலே பட்டுச்சு.

''முத்துசாமி... முத்துசாமி''


''அட... அண்ணாச்சியா... பார்த்து எத்தனை நாள் ஆச்சு? நல்லா இருக்கியா?''

எஜமானருக்குப் புது டிரஸ் எல்லாம் வாங்கிக் கொடுத்தாரு. பணத்தைத் தாராளமா செலவழிச்சாரு. ஒரு நாள்... ராத்திரி நேரம்...

''முத்துசாமி! இந்தக் குரங்கை வச்சுகிட்டு எத்தனை நாளைக்கு இப்படி காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கப் போறே? பணக்காரனா ஆகணும்னு உனக்கு ஆசை இல்லையா?'' தாடிவாலா கேட்டார்.

''ஏன் இல்லாம? சொந்தமா வீடு, வண்டி எல்லாம் வாங்கணும்னு ஆசை இருக்கு. ஆனா... பணம் சம்பாதிக்கற வழி தெரியலையே''என்று பதில் சொன்னார்.

''என்னோட கூட்டு சேர்ந்துகிட்டு நான் சொல்றபடி நடந்தா... உனக்கு ஆயிரக் கணக்கிலே பணம் கிடைக்கும்.''



வைரவேல்

ஜானகி

"நெசமாவா, எப்படி?"

அதைக் கேட்டு என்னோட பாஸ் மட்டும் இல்லே. நானும் அப்படியே அதிர்ச்சியிலே சிலை மாதிரி ஆயிட்டேன்.

"எனக்கு இந்தக் குறுக்கு வழி எல்லாம் வேண்டாம். சிம்லுவால கிடைக்கற வருமானம் போதும்' பாஸ் பதில் சொன்னாரு.

ஆனா தாடிவாலா கத்தை கத்தையா ரூபாய் நோட்டுகளை எடுத்துக் காட்டினாரு. பேசிப் பேசியே பாஸோட மனதை மாத்திப்புட்டாரு. என்னோட பாஸ் என்னை மறுநாள் காலையிலேயே சங்கிலியை அவிழ்த்துவிட்டுட்டார்.

'முத்துசாமியும் தாடிவாலாவும் இங்கே ஏன் வந்திருக்காங்க?' - அப்படிங்கற கேள்வி வண்டு போலக் குடைய ஆரம்பிச்சது. எதுக்கும் அவங்க ரெண்டு பேருக்கும் தெரியாம அவங்கள கவனிக்க முடிவு செஞ்சேன்.

உடனே ஓடிப்போய் ஜிம்மிகிட்டே என் முடிவைச் சொன்னேன். அதுவும் எனக்கு ஹெல்ப் பண்ணறேன்னு சொல்லிச்சு.



மறுநாள் செவ்வாய்க்கிழமை. மலைப்படிக்கட்டிலே ஜனங்களோட நட மாட்டம் அதிகமா இல்லை.

முத்துசாமியும், தாடிவாலாவும் ஒரு பாறையில உட்கார்ந்து பேசிட்டு இருந்தாங்க. ஏதோ முக்கியமான விஷயம் பேசப் போறாங்கன்னு என் மனசு சொல்லிச்சு. அதனாலே அவங்களுக்குத் தெரியாம நானும் அந்தப் பாறைக்குப் பின்னாடி மறைஞ்சுக்கிட்டேன்.

"என்ன திட்டம் போட்டிருக்கே அண்ணாச்சி?"

"நாளைக்கு வைகாசி மாசம் பொறக்குது. முருகனுக்கு வைரவேல் சாத்தறாங்க. காலையிலே பத்து மணிக்கு வைர வேலை ஒரு போலீஸ்காரர் துணையோட அவரையும் சேர்த்து மொத்தம் நாலு பேர் வேலை எடுத்துக்கிட்டு மலை மேலே ஏறுவாங்க. சின்ன வைர வேலானாலும் மதிப்பு ஜாஸ்தி. சாயந்திரம் ஆறரை மணிக்கு நாலு பேரும் வைர வேலை கீழே கொண்டு வந்து அப்புறம் ஆபீசுலே ஒப்படைச்சுடுவாங்க. நல்லா விசாரிச்சுட்டேன். அதனால, நாளை சாயந்திரம் வைர வேலை மலையிலேருந்து கீழே கொண்டு வரும்போது கடத்திக்கிட்டுப் போகத் திட்டம் போட்டிருக்கேன்."

"வைர வேலை கீழே கொண்டு வரும் போது கீழேயிருந்து யாரும் மேலே வர மாட்டாங்க. அப்ப நான் தயாரா இருக்கணும் சரிதானே?"

"கரெக்டா சொல்றியே. நாம ரெண்டு பேரும் என்ன செய்யணும்னு உனக்குச் சொல்றேன். மறந்துடாதே. நாம ரெண்டு பேரும் முகமூடி போட்டுக் கொண்டு இந்தப் பாறைக்குப் பின்னாடி ஒளிஞ்சுகிட்டிருக்கப் போறோம். அந்த நாலு பேரும் மேலேயிருந்து நூறாவது படிக்கட்டிலே இறங்கும்போது, நீ திடீர்னு அவங்க முன்னாடி போயி அவங்க சமாளிச்சுக்கிறதுக்குள்ளே அவங்க மூஞ்சி மேலே மிளகாய்த் தூளைத் தூவணும். போலீஸ்காரர் சமாளிச்சுக்குறதுக்குள்ளே அவரோட துப்பாக்கிய நான் பிடுங்கப் போறேன். வைரவேல் போட்டிருக்கும் பையை நீ பிடுங்கிக்கிறே. நாம ரெண்டு பேரும் வேகமா கீழே இறங்கி அடிவாரத்துக்கு வரும்போது என்னோட தோஸ்த் டாக்சியோட தயாரா நின்னுக்கிட்டிருப்பான். அதிலே ஏறி தப்பிச்சுப் போறோம்."

"அப்புறம் படிக்கட்டுலே போட்டிருக்கிற ஏழெட்டு ட்யூப் லைட்டுக்கும் ஸ்விட்ச் கீழேயே இருக்கு. கரெக்டா ஆறரை மணிக்கு லைட்டோட சுவிச்சை ஆஃப் பண்ணும்படி என்னோட தோஸ்த்கிட்டே சொல்லி வச்சுருக்கேன். அதனால... வெளிச்சம் இருக்காது. லேசா இருட்ட ஆரம்பிச்சுடும்."

ரெண்டு பேரும் எழுந்து போயிட்டாங்க. என்னோட மனசும் உடம்பும் நடுங்க ஆரம்பிச்சது.

"எப்படியாவது வைர வேலை காப்பாத்தியாகணும்... என்ன செய்யலாம்...?"

பட்டுன்னு ஒரு எண்ணம். ஜிம்மிகிட்டே சொல்லியே ஆகணும்னு தோணிச்சு. அது வழக்கமா படுத்துக்கிட்டிருக்கும் சத்திரத்து வாசல் பக்கத்தை நோக்கி ஓட ஆரம்பிச்சேன்.

மறுநாள் புதன்கிழமை. சாயந்திர நேரம். மத்தியானமே வேலையைத் தொடங்க ஆரம்பிச்சுட்டேன். அந்த நேரத்திலே ஒரு அம்மா கொஞ்சம் பெரிய கண்ணாடி பாட்டில்லே எண்ணெய்யை எடுத்துக்கிட்டு மலை மேலே மெதுவா ஏறிக்கிட்டிருந்தாங்க. எங்களோட திட்டத்துக்கு எண்ணெய் ரொம்ப அவசியம்.

"முருகா! என்னை மன்னிச்சுடு"ன்னு சொல்லிக்கிட்டே அந்த அம்மாகிட்டேயிருந்து எண்ணெய் பாட்டிலைப் பறிச்சிகிட்டேன்.

சுப்பாத்தா வீட்டுக்குப் பின்னாடி வழக்கம் போல கஞ்சி ஊத்தி வச்சுருந்த பானையத் தலையிலே வச்சுகிட்டு படிக்கட்டிலே ஏறினேன்.


கஞ்சிப் பானையப் பத்திரமா பக்கத்திலே வச்சுக்கிட்டேன். நல்ல காலம் ஜனங்க யாரும் மேலே வரலை. மேலே இருந்து இறங்கி வந்த நாலஞ்சு பேரும் எங்களைக் கண்டுக்காம கீழே இறங்கிப் போயிட்டாங்க.

மியாவ்...மியாவ்...

பூனைகள், காரணமில்லாமல் 'மியாவ் மியாவ்' என்று கத்துவதில்லை. தன் குட்டிகளைப் பாலுண்ண அழைக்கவோ, எதிரியிடமிருந்து பாதுகாக்கவோ, அல்லது தான் இருப்பதை தன்னை வளர்க்கும் மனிதனிடம் தெரிவிக்கவோ தான் அவ்வாறு கத்தும்.

'மியாவ் மியாவ்' என்ற சத்தம், அதன் குரல் ஒலி அன்று. அது மிகவும் மிருதுவான ஒலி அதிர்வு அல்லது சீறல்தான். பூனையின் குட்டி பிறந்ததும் அதற்கு கண் தெரியாது, காது கேளாது, நுகரும் தன்மை இராது. எனவே தாய் பூனையிடமிருந்து வரும் ஒலி அதிர்வுகளைக் கொண்டே குட்டிப் பூனை தாயிடம் பால் குடிக்கச் செல்லும்.

— என். ஜரினா பானு



லைன் க்ளியர். வாழைப் பழத்தைத் தின்னுப்புட்டு தோலை இருபத்தி அஞ்சாம் படிக்கட்டிலே பரப்பி வச்சேன். உடைஞ்ச கொட்டாங்கச்சி சில்லுகளை ஜிம்மி படிக் கட்டு மேலே கால்லே குத்தும்படி போட்டது.

ஒரு ட்யூப் அணைய ஆரம்பிச்சுது.

ஒரே சமயத்தில் சொல்லி வச்சிருந்தபடி நானும் ஜிம்மியும் செயல்படத் தொடங்கி னோம்.

நான் திறந்து வச்சிருந்த எண்ணெய் பாட்டிலிலிருந்து எண்ணெய்யை ஜிம்மி படிகட்டின், வலது பக்கமா தண்ணி மாதிரி ஊத்த, மழைத்தண்ணி மாதிரி தேங்கி நின்றது.

அதேசமயம் நான் கஞ்சியோடு இருந்த பானைய ஓங்கிக் கீழே போட்டேன்.

அந்த நேரத்திலே உசிரைக் கையிலே புடிச்சுகிட்டு, தடதடன்னு படிக்கட்டிலே இறங்கி வந்த தாடிவாலா... கீழே பார்க்காம வாழைப்பழத்து தோல் மேலே காலை வைக்க தடுமாறிக்கிட்டே இன்னொரு காலை... கஞ்சி ஓடும் படிக்கட்டிலே வைக்க பாலன்ஸ் சரியா பண்ணாம, மறுவினாடி - 'ஆ... ஐய்யோ அம்மான்'னு கத்திகிட்டுப் படிக் கட்டிலே சரிஞ்சு நிலை தடுமாறி விழுந்தான். முகமூடி கிழிய, கையில் இருந்த துப்பாக்கி விழுந்த அதிர்ச்சியில் டுமீல்னு வெடித்தது.


அண்ணாச்சிக்குப் பின்னாடியே வேகமாக இறங்கி வந்த முத்துசாமி... கஞ்சி... எண் ணெய்யில் வழுக்கி விழ... வைரவேல் வைத்திருந்த பை படிக்கட்டின் ஓரமா விழ, துப்பாக்கி வெடிக்கற சத்தத்தைக் கேட்டு மலை அடிவாரத்திலேயிருந்து ஜனங்க படிக்கட்டிலே ஏறி வர... அமர்க்களம்!

கால் ஒடிஞ்சு போன தாடிவாலாவாலே எழுந்திருக்கக் கூட முடியலே... உடம் பெல்லாம் நிறையக் காயம். முத்துசாமிக்கும் கால்லே நல்ல அடி. குற்றவாளிங்களை போலீஸ் பிடிச்சுகிட்டுப் போச்சு.

"என்ன இருந்தாலும் நம்ப சுப்பாத்தா வீட்டுக் குரங்குக்கு நல்ல மூளை. திருடன் இறங்கற சமயம் பார்த்து பானையப் போட்டு உடைச்சிருக்குப் பாரு" என்று கிராமத்து ஜனங்க பூராவும் என்னைத் தூக்கி வெச்சுப் பேசினாங்க.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

செப்டெம்பர் இதழில் போட்டி அறிவித்திருந்தோம். நிறையப் பேர் கலந்து கொண்டாலும் இளநீர், சீக்வயா மரம் என்ற விடைகளில் தவறு செய்திருந் தனர். சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.



பரிசு பெற்றவர்கள்:

1. கு. பாக்யலக்ஷ்மி, ஏழாம் வகுப்பு, அன்னை மேல் நிலைப்பள்ளி, திருச்சி.
2. என். சரண்ராஜ், கோம்பை பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
3. எஸ்.ஷாலினி, புதுக்கோட்டை.
4. ஜெ.ஜெ.ஹெர்பின் ஷிஜோ, மூன்றாம் வகுப்பு, மவுண்ட் கார்மல் மெட்ரிக் பள்ளி, அருமனை, கன்யா குமரி மாவட்டம்.
5. ஜெ. ஜனனி, தம்புச்செட்டி தெரு, சென்னை.

சரியான விடை:

1. வெள்ளையனே வெளியேறு - 4.12.1931
2. முதல் சுப்ரீம் கோர்ட் பெண் நீதிபதி - ஃபாத்திமாபீவி
3. சார்லி சாப்ளின் - 1889
4. டாஸ் மேனியா - தீவு
5. ஆரஞ்சு நதி - தென் ஆப்பிரிக்கா
6. ஏரிகளின் நாடு - ஃபின்லாந்து
7. இளநீர்
8. சீக்வயா மரம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

முகவரி சொல்லுமா பூங்கா?



முகவரி?

என் நண்பனை வீட்டுக்கு அழைத்தேன். என் வீடு தெரியாத நண்பனோ, "உன் வீட்டுக்கு எப்படி வருவது?" என்று கேட்டான். "சர்ச் பக்கத்தில் உள்ள 'சிறுவர் பூங்கா'கிட்ட கேட்டால் சொல்லுவாங்க" என்று கூறினேன். அதற்கு அவன் "சிறுவர் பூங்காவிடம் கேட்டால் எப்படிடா பதில் சொல்லும்?" என்று கேட்டான். அவன் பதிலைக் கேட்டுச் சிரித்தேன்.


— மு. மோசஸ்பிரவின் ஞானக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்.


நம்ப முடியவில்லை!

ஆறாம் வகுப்புக்குப் புது பள்ளிக்குச் சென்றேன். "ஐந்தாம் வகுப்பு வரை பள்ளியில் முதல் மாணவன் நான் தான்" என்றேன்! அப்போது அட்மிஷன் செய்த ஆசிரியர், என்னைச் சில வினாக்கள் கேட்டார். பதட்டத்தில் சில தவறுகள் செய்தேன். "நம்ப மாட்டேன்பா, நீயாவது முதல் மாணவனாவது" என்று கூறி அட்மிஷன் கொடுத்தார்.

பின்பு, ஆறாம் வகுப்பிலேயே மிக நன்றாகப் படித்து ஸ்காலர்ஷிப் பெற்று, அதே ஆசிரியர் கையால் ஸ்கூல் மேடையில், பலர் முன்னிலையில் காசோலை பெற்றேன். அப்போது அவர் ஆச்சரியமாக "நம்ப முடியலையே" என்றார்! அதற்கு நான், "மறக்க முடியவில்லை, நீங்கள் கொடுத்த ஸ்குரு" என்றேன்.

— ஆர்.எஸ். சந்திரசேகர்,
அம்பத்தூர்,
சென்னை.





பரிசு!


நான் அதிகமாக, முதல் மதிப்பெண் ஐந்தாம் வகுப்பில் பெற்றமைக்காகப் பாராட்டப்பட்டேன். அதுபோல மற்ற வகுப்புகளில் முதல் மூன்று இடங்கள் பெற்றவர்களும் பாராட்டப்பட்டனர். இந்த விழாவிற்கு அந்த ஊர்ப் பெரியவரும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவருமான ஒருவர் தலைமை வகித்தார். விழா முடிவில் எங்களைப் பாராட்டி நினைவுப்

பரிசுகள் கொடுத்தனர். அப்போது என்னை அழைத்த தலைமை ஆசிரியர் ஒரு பெரிய வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து எனக்குக் கொடுக்க முயன்றபோது, அந்தத் தலைமை வகித்த நபர் ஒரு விறைப்பான பார்வையில் தலைமை ஆசிரியரைப் பார்க்க, தலைமை ஆசிரியர் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அங்கிருந்த ஒரு சிறிய கிண்ணத்தை எடுத்து என் கையில் கொடுத்தார். இதற்குக் காரணம், நான் பள்ளி இருந்த ஊருக்குச் சற்றுத் தள்ளி இருந்த பக்கத்து ஊர் என்பதுதான். இதை என்னால் இன்று வரை மறக்க முடிய வில்லை.

— வி. கலாதேவி,
வீரப்பன்பாளையம்,
சேலம் மாவட்டம்.

சிக்கன நடவடிக்கை!

எங்கள் வகுப்பு மாதாந்திர தேர்வு முடிந்து, விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டு வந்திருந்தார் ஆசிரியர். ஒரு மாணவன் இரண்டே இரண்டு பக்கங்கள் தான் விடை எழுதியிருந்தான். "சரியான மக்குப் பயலா இருக்கீயேடா" என்று ஆசிரியர் அந்த விடைத்தாளுக்குரிய மாணவனைப் பற்றிக் கூறினார். சக மாணவன் ஒருவன் எழுந்து "சார்! அவன் அரசு உத்தரவுப்படி நடக்கிறான். சிக்கன நடவடிக்கையைக் கடைப்பிடிக்கிறான். அதுக்காக அவனைப் பாராட்ட வேண்டியது தான்" என்று கிண்டல் செய்தான். உடனே ஆசிரியர், "ஆமா! அதுவும் சரிதான். கஜானா





(மூளை) காலியாக இருந்தா சிக்கன நடவடிக்கை தேவைதான்" என்று சொன்னதும் குபீர் சிரிப்பு வகுப்பறையில் பற்றிக் கொண் டது!

— எஸ். பிரசாந்த்,
நெல்லையப்பபுரம்,
நெல்லை மாவட்டம்.

மணியோசை!

எங்கள் ஊருக்கு அருகே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள அய்யனார் கோவிலுக்குக் குடும்பத்துடன் சென்றோம். ஆற்றில் குளித்துவிட்டு சாமி கும்பிட்டோம். மாலை நான்கு மணிக்கு மேல் அப்பகுதியில் யானைகள் நடமாட்டம் இருக் கும். எனவே அதற்கு முன்னதாகவே வீடு திரும்ப முற்பட்டோம். அப்போது தம்பி, மீண்டும் ஆற்றில் குளிக்கப் போகிறேன் என்று அடம் பிடித்தான். அவனிடம், "யானை வந் தாலும் வந்து விடும்" என்றேன். அதற்கு அவன், "யானை வருவதற்கு முன்னால் மணி யோசை கேட்குமல்லவா? மணியோசை கேட் டவுடன் கிளம்பி விடுவோம்" என்று அவன் சொன்னதும் அனைவரும் சிரித்துவிட் டோம்.

— அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்.

மறக்க முடியவில்லை...

விடுகதைப் பக்கம்

I. 1. குளத்துத் தண்ணீரைக் குடிக்க முடியும், குளிக்க முடியாது - அது என்ன?

2. கட்டாமல், கறக்காமல் காடேறித் திரியாமல் நின்ற இடத்தில் ஒருபடி பால் - அது என்ன?

3. சூரியன் பார்க்காத நீர், உடலுக்கு குளிர்ச்சி தரும் நீர் - அது என்ன?

4. ஆகாயத்தில் தொங்குதடி அழகானச் சொம்பு, அதற்குள் இருக்கிறது அமுதம் போல் தண்ணீர் - அது என்ன?

5. காற்று நுழையாத பச்சைக் குடத்தில் தண்ணீர் நுழைந்தது - அது என்ன?

— ச. கார்த்திகா,
பன்னிரண்டாம் வகுப்பு, ஆக்ஸீலியம்
பெண்கள் மே.நி.பள்ளி, தஞ்சாவூர்.

II. 1. பகலெல்லாம் தூங்கி இரவெல்லாம் விழித்திருக்கும் - அது என்ன?

2. விரித்திருக்கும் பட்டுப்பாயைச் சுருட்ட முடியலை. அதிலிருக்கும் தங்கக் காசை எண்ண முடியலை - அது என்ன?

3. பந்தல் போட்டுச் சாப்பிடுவதில் இவன் கெட்டிக்காரன் - இவன் யார்?

4. அண்ணன், தம்பி சேர்ந்தால் போதும் எல்லாரையும் வெட்டுவார்கள் - அவர்கள் யார்?

— பா. கவிதா, கலவை.

III. 1. வராதவன் வந்தால் திறக்காதவனும் திறப்பான்! - அவன் யார்?

2. சின்னப் பெட்டிக்குள்ளே சீராக அடுக்கியிருக்கு - அது என்ன?


3. வெள்ளைக்காரி வெளியே வந்தால் கொள்ளைக் கூட்டம் மொய்க்குது! - அவை என்ன?

4. மிதித்தால் முன்னேறுவான்; மணியடித்து ஓரங்கட்டுவான் - அவன் யார்?

— நா. இராஜேந்திரன்,
அறந்தாங்கி.

IV. 1. நூறு கிளிகளுக்கும் ஒரே வாய் - அது என்ன?

நூறு கிளிகளுக்கும் ஒரே வாய்!



2. உடன் வருவான் உதவ மாட்டான் - அவன் யார்?

3. குளத்தில் ஒரு தட்டு நனையாமல் கிடக்கிறது அது என்ன?

4. என் தாய் கடல், தந்தை கதிரவன், என்னை விரும்பாத வீடே இல்லை - நான் யார்?

- பா. பிருந்தா,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா ஆங்கில வழிப்பள்ளி,
செஞ்சி.

விடைகள்:

I. அனைத்திற்கும் விடை இளநீர்

II. 1. நட்சத்திரம் 2. வானம், விண்மீன் 3. சிலந்தி 4. கத்திரிக்கோல்

III. 1. கொட்டாவி 2. தீப்பெட்டி 3. சர்க்கரை, எறும்பு 4. மிதிவண்டி.

IV. 1. வாழைப்பூ 2. நிழல் 3. நிலா 4. உப்பு

வெடிச் சிரிப்பு!





கல்விக் கண் திறந்த காமராஜர்!

தியாகம், எளிமை, நேர்மை ஆகிய மூன்றுக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்த தலைவர்களில் காமராஜரும் ஒருவர். இந்த ஆண்டு அவரது நூற்றாண்டு விழா. 1954ம் ஆண்டு முதல் 1963ம் ஆண்டு வரை, ஒன்பது வருட காலம் தமிழகத்தின் முதல்வராக அவர் இருந்தார். அவர் பதவி வகித்த காலம் தமிழகத்தின் பொற்காலம் என்று கூறலாம். வறுமை காரணமாக குழந்தைகளைக் கிராமப்புறத்துப் பெற்றோர்கள் பள்ளிகளுக்கு அனுப்பாமல் இருக்கிறார்கள் என்பதைக் கண்ட காமராஜ், பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். உயர் வகுப்பு வரை கல்வி முற்றிலும் இலவச மாக்கப்பட்டது. மதிய உணவு போடப் பட்டதால், ஏழைகளாக இருந்த பெற்றோர் களும் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பத் துவங்கினர்.

பள்ளிக் கூடங்களே இல்லாத கிராமங் களில் புதிய பள்ளிக் கூடங்கள் திறக்கப் பட்டன. எந்தக் குழந்தையும் பள்ளிக் கூடம் செல்வதற்கு ஒரு கி.மீ.மேல் செல்லக் கூடாது என்ற நோக்கத்தில் பள்ளிகள் அமைக்கப்பட்டன. பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமானதால், ஆசிரியர் களின் தேவையும் அதிகமானது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக வேலை கிடைத்தது. கல்வி நிலையங்களில் பெற்றோர்களுக்கும் ஒரு பங்கு இருக்க வேண்டும் என்பதற்காக, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் பெற்றோர் – ஆசிரியர் சங்கம் உருவாக்க ஆணை பிறப்பித்தார் காமராஜர். ஏராளமான பள்ளிக் கூடங்களில் பெற்றோர் – ஆசிரியர் சங்கத்தால் கட்டப்பட்ட வகுப் பறைகள் உருவாயின. தமிழகத்தில் இப்படி கல்விப் புரட்சியை நடத்திக் காட்டிய காமராஜ், ஒரு படிக்காத மேதை! ஆம்! குடும்பச் சூழல் காரணமாக அவரால் பள்ளியிறுதி வகுப்பு வரை கூட படிக்க முடியவில்லை.

1903ம் ஆண்டு விருது நகரில் பிறந்தார் காமராஜ். அப்போது அதன் பெயர் விருதுப்பட்டி. அப்பா குமாரசாமி. அம்மா சிவகாமி. காமராஜ் ஆறாவது படிக்கும் போது, தந்தை குமாரசாமி மறைந்து விட்டார். குடும்பம் நிலை தடுமாறியது. ஆறாம் வகுப்போடு படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து, குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காமராஜ் தலையில் விழுந்தது.



தாய்மாமா கருப்பையா நடத்தி வந்த ஜவுளிக் கடையில் வேலை செய்யத் துவங்கினார் காமராஜ். அந்தச் சமயத்தில் தான் காங்கிரஸ் பேரியக்கம் நாட்டு மக்களைச் சுதந்திரப் போருக்கு வர அழைப்பு விடுத்தது. அவ்வழைப்பில் நெஞ்சைப் பறி கொடுத்தார் காமராஜ். தன் குடும்பத்தை மறந்தார். நாட்டு விடு தலையே முக்கியம் எனக் கருதி நண்பர் களோடு விடுதலைப் போரில் இறங்கினார்.



சுதந்திரப் போரில் ஆறு முறை கைது செய்யப்பட்டு, ஒன்பது வருட காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர் காமராஜ். 1919ம் வருடம் அரசியலில் நுழைந்த காமராஜ், சரியாக இருபது ஆண்டுகள் கழித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானார். அதற்கும் சரியாக இருபத்து நான்கு வருடங்கள் கழித்து அகில இந்திய காங்கிரஸுக்குத் தலைவராகவும் உயர்ந்தார் காமராஜ். இவரது அரசியல் குரு, தீரர் சத்திய மூர்த்தி. காந்தி, நேரு ஆகியோர் காமராஜ் அவர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பு உணர்வைப் பல சமயங்களில் பாராட்டியிருக்கிறார்கள். "நாட்டின் தலைவர்கள் எல்லோரும் பதவி வகிப்பது நல்லதல்ல. எனவே அரசின் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள் பதவி விலகி, கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும்" என்று கூறி, தாம் வகித்து வந்த முதல்வர் பதவியை விட்டு விலகினார் காமராஜ். இந்த அடிப்படையில் வேறு பல தலைவர்களும் ராஜினாமா செய்தனர்.

"சட்டம், மக்களுக்காக ஏற்பட்டதே தவிர, சட்டத்துக்காக மக்கள் இல்லை" என்பதை அடிக்கடி வலியுறுத்தினார் காமராஜ். தெரிந்தவர் என்ற காரணத்திற்காக யாரும் அவரிடம் சலுகைகளைப் பெற்று விட முடியாது. வட சென்னையில் உயர்நிலைப் பள்ளிக் கூடம் திறக்கும் நோக்கத்தில் அவருக்குத் தெரிந்தவர்கள் அனுமதிக்காக வந்தனர். அவர்கள் வகுப்பறைகள் கட்டாததால், விதிப்படி மூன்று வகுப்புகளுக்கு மட்டுமே அனுமதி கொடுக்க முடியும். "அடுத்த வருடம் எப்படியும் கட்டடம் கட்டி விடுவோம்" என்றும் உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால் காமராஜ் "நீங்கள் கட்டடம் கட்டுவீர்கள்; எனக்குத் தெரியும். ஆனால் விதிப்படி மூன்று வகுப்புகளுக்கு இப்போது அனுமதி கொடுத்தால் தான் கட்டடம் கட்டினால் தானே அடுத்த வகுப்பு என்று சுறுசுறுப்புடன் செயல்பட்டு அதை முடிப்பீர்கள். இல்லையென்றால் கட்டடம் கட்டினாலும் கட்டா விட்டாலும் தொடர்ந்து மேல் வகுப்புகளுக்கு அரசு அனுமதி கொடுத்தேதான் தீரவேண்டுமென்று நீங்கள் நிதானமாகச் செயல்படக் கூடும். எனவே முதலில் மூன்று வகுப்புகளுக்கான அனுமதி தான்" என்று சொல்லி விட்டார் காமராஜ். அதிகாரிகள் அசந்து போய் விட்டார்கள்!

— ப்ரியன்



முதல் பரிசு:

டி. ஆர்த்தி,
ஆறாம் வகுப்பு,
ஹிரியூர், கர்நாடகா

பட் பட் படார்...

வண்ணத் தூரிகை

அக்டோபர் இதழில் 'தீபாவளி' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். போட்டியில் கலந்து கொண்ட ஓவியங்களில் பரிசு பெற்ற ஐந்து ஓவியங்கள் இங்கே...



இரண்டாம் பரிசு:

எஸ். பிரபு,
தேனி



மூன்றாம் பரிசு:

பா. சாய் ஷங்கர்,
ஆறாம் வகுப்பு,
புனித அன்னம்மாள் மேல் நிலைப் பள்ளி,
சென்னை



ஆறுதல் பரிசு:

கே. சந்தன குமார்,
பன்னிரண்டாம் வகுப்பு,
என்.எஸ்.கே.பி. மேல் நிலைப் பள்ளி,
கூடலூர்



ஆறுதல் பரிசு:

டி. கீர்த்தி,
எட்டாம் வகுப்பு,
டி.ஐ. பள்ளி,
சென்னை

உங்கள் நூலகம்

மறதி இல்லா கணினி!

பாட்டும் படமும் — வி.என்.எஸ். உதயசந்திரன் - பக் 80 - ரூ.150/- பூபால சிங்கம் புத்தக சாலை, இல.202, செட்டியார் தெரு, கொழும்பு.

இலங்கைத் தமிழ்க்குழந்தைகளுக்கு நன்கு அறிமுகமான படைப்பாளியின் வண்ணமிக்க படைப்பு. பாடல்களின் எளிமையும் அழகான படங்களும் சந்தமும் குழந்தைகளை ஈர்க்கும் மந்திரக்கோல். குழந்தைகளுக்குப் பழக்கமான தலைப்புகளோடு கணினியை அறிமுகம் செய்யும் பாடல் அடிகள் இதோ:

கணினி கணினி கணினியாம்
கணிதம் அதற்குத் தெரியுமாம்
படம் வரைந்து காட்டுமாம்
படிக்கத் துணை புரியுமாம்
தகவல் சேர்க்க உதவுமாம்
தகவல் நமக்குத் தந்திடுமாம்
மனதில் பதித்துக் கொள்ளுமாம்
மறதி அதற்கு இல்லையாம்


உலக நாடுகளும் விவரங்களும் — மு. அப்பாஸ் மந்திரி - பக்.344 - ரூ. 130/- மணி மேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.

எல்லோருக்கும் நன்கு அறிமுகமான ஆசிரியரின் படைப்பு. உலக உருண்டையில் உள்ள நாடுகளைப் பற்றிய எல்லா விவரங்களும் (பரப்பளவு, தலைநகர், மக்கள் தொகை, மொழி, சமயம், நாணயம், எழுத்தறிவு, தொழில் போன்று) இதில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவை தவிர ஐ.நா. உறுப்பினர் நாடுகள், சார்க் மாநாடுகள் போன்ற உலக அமைப்புகளைப் பற்றிய தகவல்களும் அளிக்கப்பட்டுள்ளன. வினாடி - வினா ஆர்வலர்களுக்கு மட்டுமல்ல பொது அறிவில் நாட்டமுடைய அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய படைப்பு.

அறிவியலாரின் மறுபக்கம் — சுப்ர.பாலன் - பக் 98 - ரூ.20/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.

அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பு இந்த நூல். மைக்கேல் பாரடே, விக்டோரியா மகாராணியாரின் அழைப்பை ஏற்று விருந்துக்குச் சென்றதால் அவர் சந்தித்த இடர்கள், அசைவத்தை விலக்கி வைத்திருந்த பெஞ்சமின் பிராங்ளின் சைவத்திற்கு மாறிய நிகழ்ச்சி என்று இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். வாழ்க்கை வரலாறு என்றாலே சலிப்படைவோரும் விரும்பிப் படிக்கும்படி அரிய நிகழ்ச்சிகள் வாழ்க்கைக் குறிப்புகளோடு எளிய நடையில் தரப்பட்டுள்ளன. தரமான படைப்பு.

— ரே



கூடா நட்பு!

கண்ணன், சரவணன், பிரபு மூவரும் நண்பர்கள், நன்றாகப் படிக்கக் கூடியவர்கள். ஒரு சாதாரண விஷயத்தில் மன வருத்தம் ஏற்பட பிரபு நண்பர்களை விட்டு விலகினான். கண்ணனும் சரவணனும் எவ்வளவோ முயன்றும் பிரபுவைச் சமாதானப்படுத்த முடியவில்லை. நாட்கள் சென்றன.

மாணிக்கம் புதிதாகப் பள்ளியில் சேர்ந்த மாணவன். அடிக்கடி லீவு போடுவான். வகுப்பறையில் எப்பொழுதும் யாரையாவது கிண்டல் செய்து கொண்டே இருப்பான். படிப்பிலும் சுமார். யாராவது, ஏதாவது சொன்னால் உடனே சண்டைக்குப் போய் விடுவான். இவன் இப்படி இருந்ததால் ஒன்பதாம் வகுப்புக்குள் ஐந்து பள்ளிகள் மாற வேண்டிய சூழ்நிலை.

சகமாணவர்களுக்கு ஆச்சர்யம் என்வென்றால் மாணிக்கத்தின் நண்பனாகப் பிரபு மாறியது தான். பிரபு ஓரளவு நன்றாகப் படிக்கக் கூடியவன்; அமைதியானவன்; லீவே போடாதவன். எதிர் - எதிர் குணங்களுடைய இருவரும் எப்படி நண்பர்களானார்கள் என்பது யாருக்கும் புரியாத புதிராக இருந்தது.

மாணிக்கத்துடன் சேர்ந்து பிரபுவும் அரட்டையடித்தான்; சண்டைக்குப் போனான், அடிக்கடி லீவு போட்டான். படிப்பில் கவனம் குறைந்தது. ஆசிரியர்கள் பிரபுவைக் கண்டித்தனர். பிரபுவோ மாணிக்கத்தின் நட்பை இழக்கத் தயாராக இல்லை.

மாணிக்கம், பிரபுவைப் பற்றிய புகார் தலைமை ஆசிரியருக்குச் சென்றது.

பிரபுவைப் பார்த்த தலைமை ஆசிரியர் அதிர்ந்து போனார். ஏனென்றால் சென்ற ஆண்டு 'சிறந்த மாணவ'னுக்கான பரிசை அவர் கையாலேயே பிரபுவுக்குக் கொடுத்திருந்தார்!

பிரபுவின் பெற்றோர்கள், நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பிரபுவின் மேல் கடுமையான நடவடிக்கை எடுப்பதைக் கைவிட்டார் தலைமையாசிரியர்.


எப்படிப்பட்டவர்களுடன் பழகுகிறோம் என்பதைப் பொறுத்தே, நம்முடைய குணமும் மாறும் என்பது பிரபுவின் விஷயத்தில் உண்மையாகி விட்டது.

இதை உணர்த்தும் குறளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

நிலத்தியல்பா ___ ___ மாந்தர்க்
கினத்தியல்பா ___ மறிவு.

- தம்பிப்பயல்

இந்தப் படத்திலிருக்கும் ஒரு தவறைக் கண்டுபிடிக்கும் 5 பேருக்கு ரூ. 20/- பரிசாக வழங்கப்படும்.





தோல்வியை எப்படி தாங்கிக் கொள்வது?



✱ வே. சுதர்சன், நல்லூர்.


? ஜக்கு, இப்பொழுது மழைநீர் சேகரிக்க வேண்டும் என்கிறார்களே, அது ஏன்? புரியற மாதிரி விளக்கமா சொல்லேன்.

மரங்கள், காடுகளை நாம் அழித்து வந்ததால் மழை பொய்த்து விட்டது என்பது உனக்கும் தெரியும் தானே! மழை வளம் குறையக் குறைய, நிலத்தடி நீரின் அளவும் குறைந்து விட்டது. அந்தக் காலத்தில் குளம், குட்டை, ஏரி என நீரைச் சேகரித்துப் பயன்படுத்தினர். குளம், குட்டைகள் எல்லாம் இப்பொழுது அடுக்கு மாடிக் கட்டடங்கள் ஆகிவிட்டன. எனவே மழை நீரைச் சேமித்து பயன் படுத்த முடியவில்லை. மழை நீரை ஆங்காங்கு சேகரித்து, வடிகட்டி, கிணறுகளில் விடும் பொழுது, அந்தந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். எனவே தான் மழை நீரைச் சேகரிக்குமாறு வலியுறுத்தப் படுகிறது.

• கள்ளி







• அஸ்பராகஸ்

✱ ஆ. சந்தியா, வந்தவாசி.

? ஜக்கு, உன்னுடைய சொந்த ஊர் எது?


சூரிய குடும்பத்தில், மூன்றாவது கிரகத்தில், ஆசியா கண்டத்தில், இந்தியாவில், தமிழ் நாட்டின் தென் பகுதியில் ஓர் ஊர். யாதும் ஊரே யாவரும் கேளிர்.

✱ ப. காளிதாசன், நீர் விளங்குளம்.

? தோல்விகளை என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. நான் என்ன செய்வது ஜக்கு?

ஒருத்தரின் வெற்றி; இன்னொருவரின் தோல்வி. வெற்றியும் தோல்வியும் தவிர்க்க முடியாத விஷயங்கள். வெற்றியை

அன்புள்ள ஜக்கு...



எப்படி சந்தோஷமாக எடுத்துக் கொள் கிறோம். ஆனால் தோல்வி நம்மை மிகவும் வருந்தச் செய்து விடுகிறது. தோல்வியைக் கண்டு மனம் உடைந்து போய்விடாமல் பார்த்துக் கொண்டால்தான், அடுத்த வெற்றியை நோக்கி நாம் நடை போட முடியும். தோல்வியை ஒரு தடை கல்லாக நினைக்காமல் படிக்கல்லாக எடுத்துக் கொண்டால், வெற்றி என்ற சிகரத்தை அடைந்து விடலாம். எதுவும் நிலை யானதல்ல; இன்றைய தோல்வி நாளைய வெற்றி. நம்பிக்கையோடு தோல்வியை எதிர் கொள்ளுங்கள் காளிதாசன்.

*** எஸ். பாரதி, திருவிடை மருதூர்.**

? தங்கம் ஏன் கறுப்பதில்லை ஜக்கு?

தங்கம் எந்தப் பொருளுடனும் வேதி வினை புரிவதில்லை. நிலத்திலிருந்து வெட்டி எடுப்பதிலும் தனிப் பொருளாகத் தங்கம் நிறையக் கிடைக்கிறது.

வெள்ளி, செம்பு முதலிய உலோகங் களில் கலந்துள்ள தங்கத்தையும் எளிதில் பிரித்தெடுக்க முடியும். பொன் நிறத்தில் பளபளக்கும் தங்கம் நீர், காற்று ஆகிய வற்றுடன் வேதிவினை புரியாமல் இருப்ப தால் கறுப்பதில்லை பாரதி.

*** எம். பூங்குழலி, துறையூர்.**

? இலையே இல்லாத தாவரங்கள் உண்டா ஜக்கு?

உண்டு பூங்குழலி. வறண்ட நிலத் தாவரங்களில், சப்பாத்திக் கள்ளியில் இலைகள் தோன்றியவுடன் உதிர்ந்து விடுகின்றன. இலையின் வேலையைத் தட்டையான அதன் பசுமைத் தண்டு செய்கிறது. மேலும் அஸ்பராகஸ் என்ற தாவரத்தில் இலைகள் முட்களாகவும் செதில்களாகவும் மாறியுள்ளன. இந்த மாறுதல்கள் நீராவிப் போக்கைத் தவிர்க் கவும், மற்ற பிராணிகளிடமிருந்து காப் பாற்றிக் கொள்ளவும் உதவுகிறது.

*** பி. ரமேஷ், உடுமலைப்பேட்டை.**

? நான் சரவெடிகளைச் சர்வசாதாரண மாக வெடிப்பேன். நீ எப்படி ஜக்கு?

வெடிச் சத்தம் என்றாலே எனக்குப் பயம் அதிகம். சத்தம் இல்லாமல், கண் களுக்கு விருந்தாகும் புஸ்வாணம், மத்தாப்பூ போன்றவை தான் எனக்கு விருப்பம். இதுவரை நான் பொட்டு வெடி யைக் கூட வெடித்ததில்லை என்றால் உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும்! காதைத் துளைக்காமல், ஆபத்து இல்லாத வெடிகளைப் பயன் படுத்துங்கள், தீபாவளி யைப் பாதுகாப்பாகக் கொண்டாடுங்கள் ரமேஷ்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை




1 அ	ந்	2 த	மா	ன்	■	3 தே	■	ன்
ன்	■	வ	■	ப	■	டு	ண்	4 வ
ன்	■	ளை	■	ம்	■	■	■	கை
ம்	■	■	■	5 க	■	டை	க	6 ப
■	■	7 கீ	■	■	■	8 கா	■	■
கோ 9	டா	ரி	■	10 க	■	■	■	ய்
வ	■	■	■	ர	■	ம்	■	கா
11 ல	வ	ன்	■	ண்	■	ன	■	ள
ன்	■	12 தே	■	டி	ண்	13 வ	தி	14 மி

செய்தித் துளிகள்...

டீயின் மகிமை!

தொடர்ந்து மூன்று வாரங்களுக்குக் கறுப்பு டீ அருந்தி வந்தால் கெட்ட கொழுப்புகள் உடலில் இருந்து கரையும். இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களையும் குறைக்கும் என்று அமெரிக்க விவசாயத்துறை விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்து மூன்று வாரங்களுக்குக் கறுப்பு டீ அருந்தி வந்தவர்களுக்குக் கெட்ட கொலஸ்ட்ரால் என்றழைக்கப்படும் 'லோ-டென்சிடி லிபோ புரோட்டீன்' (எல்டிஎல்) ஏழு முதல் பதினோரு சதவிகிதம் வரை குறைந்திருந்தது. கறுப்பு டீயில் எந்தப் பொருள் கெட்ட கொலஸ்ட்ராலைக் குறைத்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நல்ல கொலஸ்ட்ராலைக் கறுப்பு டீ எந்த வகையிலும் பாதிப்பதில்லை. ஆப்பிள், வெங்காயம் போன்றவற்றிலும் கூட கெட்ட கொலஸ்ட்ராலைக் குறைக்கும் பொருட்கள் நிறைந்துள்ளன என்கின்றனர் விஞ்ஞானிகள்.



புதிய கரன்ஸி

ஈராக்கில் புதிய கரன்ஸிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. சதாம் உசேனின் உருவப் படத்துக்குப் பதில் பாபிலோனை ஆண்ட மன்னரின் படமும், 10ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த கணித மேதையின் உருவப் படமும் பொறிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சதாம் காலத்தில் இருந்த கரன்ஸி ஈராக் தினார் என்று அழைக்கப்பட்டது. புதிய கரன்ஸி ஸ்விஸ் தினார் என்று அழைக்கப்படுகிறது.

ஆயுதம்...

உலகிலேயே அதிக அளவு ஆயுதம் வாங்கிக் குவிக்கும் வளரும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. சீனா முதல் இடத்திலும் ஐக்கிய அரபுச் சிற்றரசு நாடுகள் இரண்டாவது இடத்திலும் உள்ளன. அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகிய வளர்ந்த நாடுகள் ஆயுதங்களைத் தயாரித்து விற்கின்றன. அவற்றின் தேச வருமானத்தில் கணிசமான பகுதி இந்த ஆயுத விற்பனை மூலம்தான் கிடைக்கிறது. 1999-2000 ஆண்டுகளுக்கு இடையில் மொத்தம் 36 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ராணுவ ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

சீனா அங்கீகாரம்

சிங்கப்பூருக்கு அடுத்த படியாக சிக்கிம் ஒரு தனி நாடு என சீன வெளியுறவுத் துறை இணைய தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது சிக்கிம் ஒரு தனி நாடு என்பதைச் சீனா நீக்கிவிட்டது. இதன் மூலம் சிக்கிம் இந்தியாவின் ஒரு பகுதி என சீனா அங்கீகரித்துள்ளது.

பெருமை!

உலகின் 50 முன்னணி பெண் தொழிலதிபர்களின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் இடம் பெற்றுள்ளனர். 28 நிறுவனங்களை நடத்தி வரும் சாப்ரியா குழுமத்தை லாபகரமாக நிர்வகித்து வரும் வித்யா சாப்ரியாவும், இந்தியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நைனா லால் கித்வாயும் ஃபோர்பஸ் இதழால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். வித்யா சாப்ரியா 38வது இடத்திலும், கித்வாய் 47வது இடத்திலும் உள்ளனர்.

அம்மணி அம்மாளுக்கு வாய் ஜாஸ்தி. எதிலும் குற்றம் கண்டு பிடிக்கும் சுபாவம். மாதத்தில் இருபது நாள் ஏதாவது வியாதி சொல்வாள். வசதி இருந்ததால் வயணமாகச் சாப்பிட ஆசை. அவள் சுபாவத்தால், வந்த சமையல்காரர்கள் ஒரு மாதம் கூட நிலைக்கவில்லை!

அப்பாவியான அப்பாவு பட்டிக்காட்டிலிருந்து வந்திருந்தான். நண்பர் ஒருவர், சமையல்தானே என்று சிலவற்றைக் கற்றுக் கொடுத்து அனுப்பி இருந்தார்.


"எதையும் தெரியாது என்று சொல்லாதே! தெரியாமல் பண்ணிவிட்டேன். சொல்லிக் கொடுத்தால் தெரிஞ்சுக்கறேன்னு பணிவாக் கேளு. அம்மணிக்கு இரக்க குணமும் உண்டு. வயிறு நிறைய சாப்பாடு போடுவா. வருஷத்துக்கு இரண்டு உடுப்பு எடுத்துத் தருவா. தங்க இடமாச்சு. வேலையிலே கெட்டிக்காரனாயிட்டா சம்பளம் கூடக் கேட்கலாம். கையைச் சுட்டுக்காம ஜாக்கிரதையா வேலை பண்ணு" என்று நிறைய புத்திமதி சொன்னார்.

அப்பாவு வந்ததும் பவ்யமாக, "என்ன சமைக்கணும்?" என்று கேட்டான். "முதல்லே குளி. சுத்தமா தான் சமையல் பண்ணணும். அந்தக் கூடையிலே சேப்பங் கிழங்கு இருக்கு. மோர் நிறைய மிச்சமிருக்கிறதாலே சேப்பங்கிழங்கு மோர்க் குழம்பு பண்ணிடு. நேத்து பொரிச்ச அப்பளம், வடகம் இருக்கு. போதும்" என்றாள் அம்மணி.

எஜமானி உத்தரவுப்படி குளித்து சமையல் செய்தான். சூடாகச் சாப்பிட வந்தாள் அம்மணி. சாதம் பரிமாறினான். கசகசவென்றிருந்தது. 'முதல்நாள். தண்ணீர் அதிகம் வைத்திருப்பான். சாதுவான இவனைக் கண்டித்தால் ஓடிவிடுவான்!' என்று கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"மோர்க்குழம்பு தானே! விடு" என்றாள்.

குழம்பை மூடியிருந்த தட்டை அகற்றியதும் முகத்தைச் சுளித்தாள். "கறுப்பு கறுப்பாக முடி போல என்ன மிதக்கிறது? என்ன தாளித்தாய்?" என்று எரிச்சலோடு கேட்டாள்.



கடுகு

"கடுகு தானம்மா தாளித்தேன்!" என்றபடி மோர்க்குழம்பைக் கலக்கி ஊற்றினான்.

சேப்பங்கிழங்குகள் தோலோடு இளித்தன. "எத்தனை கழுவியும் கறுப்பு போகலேம்மா" என்ற ஆதங்கமான பதில் வேறு!

"சேப்பங்கிழங்கைத் தோல் உரிச்சுப் போடணுமின்னு உனக்குத் தெரியாதா? கர்மம்!

மாலதி

கொண்டு போய் குப்பையில் ஊற்று! சாமானை விரயம் பண்ணுகிற ஜென்மம்" என்றபடி வெறுப்போடு எழுந்து கொண்டாள் அம்மணி.

அப்பாவுவின் பணிவான வேண்டுகோள் அவனைத் தொடர்ந்து வேலையில் இருக்க வைத்தது.

"இன்றைக்கு வெண்டைக்காய் பொரியல் பண்ணி வை" என்று சொல்லிவிட்டு வண்டியில் அறுவடையை மேற் பார்வையிடச் சென்றிருந்தாள் அம்மணி.

பசியோடு, சாப்பிடலாம் என்று திரும்பி வந்தாள். அப்பாவு சமையலறையில் இருப்பதைக் கண்டு "இன்னுமா சமையல் முடியவில்லை? பாயசமும், மிளகு ரசமும், வெண்டைக்காய் பொரியலுக்கும் மூன்று மணி நேரமா?'' என்று கேட்டபடி வந்தவள், சமையலறையின் அலங்கோலத்தைக் கண்டு மலைத்துப் போனாள்!

"என்னம்மா செய்றது? வெண்டைக் காயை அப்பவே வேக வைச்சாச்சு! தோல் சீவி உள்ளேயிருக்கிற



தாளித்த பாயசம்!

முத்துகளைச் சேகரிச் சிண்டிருக்கேன். அட, எனக்கு வேண்டாம்! உங்களுக்காவது ஒரு பிடி வேண்டாமா? அதுதான் மறுபடி இரண்டு கிலோ வாங்கி, வேக வைச்சு தோல் சீவி முத்தெடுக்கிறேன்! செய்கிற வேலை திருத்தமா இருக்க வேண்டாமா? ஒரு தடவை சொல்லிக் கொடுத்தா 'கப்'புனு புடிச்சுக்கணுமின்னு அன்னிக்கே சொன்னீங்களே" என்று அவன் சொல்ல அம்மணிக்கு மயக்கமாக வந்தது!

"வெண்டைக்காய் கிடக்கட்டும். பசி உயிர் போகிறது. ஒரு டம்ளர் பாயசம் கொடு" என்றபடி கூடத்துக்கு வந்தாள். அறுவடை தினத்தன்று 'தானிய லக்ஷ்மி வருகிறாள்' என்று கிராமாந்திரங்களில் பாயசம் செய்வது வழக்கம்.

ஒரு தம்ளரில் பாயசம் கொண்டு வந்தான் அப்பாவு. "இதென்ன, கடுகு, மிளகாய்ப் பழமெல்லாம் மிதக்கிறது?" என்று கேட்டாள் அம்மணி.

"அதெல்லாம் ஒரு குறையும் வைக்கிறதில்லேம்மா! ரசத்துக்குத் தாளிக்கும்போது பாயசத்துக்கும் தாளிச்சிட்டேன்" என அப்பாவு கூறியதும் அம்மணி தலை சுற்றி சோபாவில் சரிந்தாள்!

உங்களிடமிருந்து...



சிரிப்பு ராஜா!

ஒட்டகமும் ஒட்டமானும் என்ற நாடகம் வித்தியாசமாகவும் சுவாரசியமாகவும் இருந்தது. ஓவியம் சூப்பர். மீசை ராஜாவைப் படித்து நன்றாகச் சிரித்தேன். அழுத குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிய யானைகளைப் பற்றி வியந்தேன்.

_ என். கௌதம்,
பத்தாம் வகுப்பு,
வேலூர்.

அசத்தல்!

'துரோகி யார்?' தொடர்கதை ஆரம்பமே அசத்தல்! முதல் அத்தியாயத்திலேயே விறுவிறுப்பு தொற்றிக் கொண்டு விட்டது.

_ வி. நாராயணி,
ஒன்பதாம் வகுப்பு,
காரமடை, கோவை.

விறுவிறுப்பு...

அருமையான நண்பர்கள் மத்தியில் ஒருத்தர் புகுந்து குழப்பத்தை உண்டு பண்ணி, ராஜுவை மட்டுமின்றி எங்களையும் 'இவன் துரோகியா?', 'அவன் துரோகியா?' என யோசிக்க வைத்து விட்டார் அருண் சரண்யா. சுவாரசியம், விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாத புதிய தொடரை வரவேற்கிறேன்.

- கே. தண்டபாணி,
பதினோராம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, தர்மபுரி.

ஊக்கம்...

கோவை மாணவர் ஸ்பெஷல் அருமை. கல்யாணியின் திறமையைக் கண்டு வியந்தேன். கல்யாணி வெகு விரைவில் அவரது லட்சியங்களை அடைவார் என்பதில் சந்தேகமில்லை. கல்யாணி போன்றவர்களைப் பற்றி கோகுலத்தில் நிறைய செய்திகள் வந்தால் எங்களுக்கு மிகவும் ஊக்கமாக இருக்கும்.

_ ஆ. சந்தியா, பத்தாம் வகுப்பு,
அ.மே.நி. பள்ளி,
நல்லூர்.

டாப் கார்னர்!

'அது தான் கல்யாணி' கட்டுரையைப் படித்தேன். கல்யாணி போல் பல விஷயங்களையும் நான் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. ஜோக்ஸ் கார்னர் ரொம்ப டாப் கார்னர்! மறக்க முடியவில்லை பகுதியில் வெளியான அத்தனை அனுபவங்களும் என்னாலும் மறக்க முடியவில்லை.

_ ஆர். ஜி. ஹரி,
திசையன் விளை

சுழல் கோப்பை யாருக்கு?

இந்த ஆண்டின் சுழல் கோப்பை யாருக்கு? என்று ஆவலாக இருப்பீர்கள். இன்னும் ஒரு மாதத்தில் தெரிந்துவிடும். கைதட்டக் காத்திருங்கள்.



• மாத்யூ ஹெய்டன்

• ராகுல் திராவிட்

அசத்தினார் ஹெய்டன்!

கடந்த ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. மோசமான வானிலை, இந்தியவீரர்கள் தங்களின் முழுத் திறமையையும் காட்டாதது என நியூஸிலாந்து சுற்றுப் பயணம் தோல்வியடையக் காரணங்களாகச் சொல்லப்பட்டது.

அதற்குப் பிறகு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் சிறப்பாக விளையாடி இறுதி ஆட்டம் வரை சென்றது இந்திய அணி.

இப்பொழுது நியூஸிலாந்து வீரர்கள் இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் வந்துள்ளனர்.

இந்தியாவிற்கும் நியூஸிலாந்துக்கும் இடையே இரண்டு டெஸ்ட் போட்டிகளும் ஒருதினப் போட்டிகளும் நடைபெற உள்ளன.

ஆமதாபாத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்பிற்கு 500 ரன்களைக் குவித்தது இந்திய அணி. ராகுல் திராவிட் அபாரமாக விளையாடி 222 ரன்களை அடித்தார். டெஸ்ட் போட்டிகளில் திராவிட்டின் அதிகபட்ச ஸ்கோர் இது. முதல் டெஸ்ட் டிராவில் முடிந்து விட்டது.

நியூஸிலாந்தில் ஏற்பட்ட தோல்விக்குப் பதிலடி கொடுக்குமா இந்திய அணி என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.


நியூஸிலாந்து - இந்திய அணிகளின் போட்டிகள் தவிர நியூஸிலாந்து, இந்தியா, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான முத்தரப்பு ஒருதினப் போட்டிகளும் நடைபெற உள்ளன. கிரிக்கெட் ஆர்வலர்களுக்கு அருமையான விருந்து!

ஆஸ்திரேலியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையே டெஸ்ட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆஸ்திரேலியாவின் மாத்யூ ஹெய்டன் 380 ரன்களைக் குவித்து உலக சாதனை படைத்தார். இதுவரை பிரையன் லாரா 375 ரன்களைக் குவித்தது தான் உலக சாதனையாக இருந்து வந்தது. ஹெய்டன் அதை முறியடித்துள்ளார்.

ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **ஆடுகள்.**

உங்கள் கற்பனைக்கேற்றவாறு ஆடுகளை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.


மூன்று தேங்காய், மூன்று வரம்!
கதை : பா. கவிதா
படம் : சேகர்
இது முனிவர் கொடுத்த தேங்காய். நாம என்ன நினைச்சிட்டு உடைக்கிறோமோ அது நடக்கும்.
பக்கத்து வீட்டுல இருக்கிற மாதிரி கலர் டீ.வி., வைர அட்டிகை கேட்கப் போறேன்.
மற்றவர்கள் விஷயத்தில் மூக்கை நுழைப்பதே உன் பிழைப்பா போச்சு.
மல்லிகாவுக்குக் கோபம் வந்தது.
ஆமாம். எல்லோர் விஷயத்திலும் மூக்கை நுழைக்க, எனக்கு முகம் முழுவதும் மூக்கு வேணும்.
அடுத்த நொடி மல்லிகாவின் முகம் முழுவதும் மூக்குகள் இருந்தன.
ஐயோ, என்ன செய்வேன்? என் மூக்கெல்லாம் போகணும்.
இரண்டாவது தேங்காயை உடைத்தாள்.
மல்லிகா மூக்கே இல்லாதவளானாள்.
என் மூக்கு மட்டும் திரும்ப வேணும்.
சே!
மல்லிகாவின் கோபத்தால் மூன்று வரங்களும் வீணானதை எண்ணி வருந்தினான் சோமு.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka

